# புதுவிதி
PUTHU VITHI


பொய் வதந்திக் கொள்ளி பொசுக்கென்று
போய்ப்பற்ற ஏற்ற வகையில்
இதமான நச்செண்ணெய் ஊற்றி
அதில் ஊற வைத்த உள்ளங்கள் இல்லாமல்
இத்தனை தீய எரிவு நடைபெறுமா?
எத்தனை தீய எரிவு -தலையுடைப்பு,
குத்துவெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு?
ஒன்றும் எமக்குச் சரியாய் விளங்கவில்லை.
'திக்'கென்ற மோதல் - திக்கிட்டுப் போனோம் நாம்.
வாயடைத்துப் போனோம்;
வராதாம் ஒரு சொல்லும்.



இ.முருகையன்


புதுமை : 01 | 16 ஜூலை 2016 | விதி : 05


# நிழல் அரசும் போரும்



## விடுதலைப் போராளிக்கு வீரவணக்கம்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'


# விடுதலைப்போராளிக்கு வீரவணக்கம்

ஜோஷ்வா ஐசக் ஆசாத்.



"புர்ஹான் வானி"

காஷ்மீர் விடுதலைப் போராட்டவீரன்.



ஜூலை8 இல் இருந்து இந்திய அரசாலும், ராணுவத்தாலும், ஊடகங்களாலும் மிகப்பெரிய வெற்றியாகக் கொண்டாடப்பட்டு வருவது புர்ஹான் வானி என்னும் 21 வயது இளைஞனின் மரணமாகும். நமக்கெல்லாம் தீவிரவாத இயக்கமாக அறியப்பட்ட ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் இளம் தளபதிகளுள் ஒருவர் இவர். ஜூலை 8 இல் நடைபெற்ற இந்திய ராணுவத்துடனான சண்டையில் தனது இரண்டு தோழர்களுடன் கொல்லப்பட்டுள்ளார். காஷ்மீர் மாநிலத்தில் தெற்கில் உள்ள புலவாமா மாவட்டத்தில் ட்ரால் நகரத்தில் வசிக்கும் அரசுப் பள்ளி தலைமையாசிரியர் முசாபர் வானியின் இரண்டாவது மகன் தான் புர்ஹான் வானி.

2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் ஒடுக்குமுறைக்கு எதிராக காஷ்மீரில் நடைபெற்ற எழுச்சி மிகுந்த போராட்டங்கள் காஷ்மீர் விடுதலை போராட்டத்துக்கு ஒரு புதிய பரிணாமத்தை கொடுத்தன. இதன் முக்கியத்துவம் என்னவென்றால், 1990 களில் நடைபெற்ற வீரியமான ஆயுதம் தாங்கிய போராட்டத்தைப் பற்றியும், இந்திய ராணுவத்தால் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்ட அப்பாவிகள், கூட்டு பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்கள், நூற்றுக்கணக்கில் காணாமல் போக செய்யப்பட்டவர்கள் என நடந்த அட்டூழியங்களை நேரில் அனுபவிக்காத, வெறும் வரலாறாக மட்டுமே அறிந்திருந்த ஒரு புதிய இளம் தலைமுறை இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தது என்பது தான்.

## கற்களே ஆயுதங்கள்

2010 ல் அவர்கள் கையாண்ட போராட்ட வடிவமும் பயன்படுத்திய ஆயுதமும் மிகவும் எளிமையான ஒன்று. அது இந்திய ராணுவத்தினர் மீது கற்களை வீசி எறிவது. மிகச் சாதாரணமாகத் தோன்றும் இந்த போராட்டத்தில் ராணுவத்தால் நூற்றுக்கணக்கான போராட்டக் காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதுவே அவர்களின் போராட்டத்தின் வீரியத்தை உணர்த்தும். இதில் பெரும்பான்மையானவர்கள் நன்கு படித்த, வசதியான குடும்பப் பின்னணி கொண்ட இளைஞர்கள். இந்திய அரசும் ராணுவமும் தாக்குபிடிக்க முடியாமல் விழித்தது. ஏதும் இல்லாதவன் போராடுவது வேறு. ஆனால் எல்லாம் இருப்பவன் போராடுவதை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை, தடுக்க முடியவில்லை.

இந்த மாற்றத்தைக் குறித்து சொல்லும் சமூக ஆய்வாளர்கள், 1990களில் காஷ்மீருக்கான விடுதலை/ 'ஆசாதி' என்னும் முழக்கம் முன்னிலை வகித்தது. ஆனால் இன்றைய தலைமுறைக்கு இந்திய ஆக்கிரமிப்பு அரசின் ஒடுக்குமுறையை எதிர்ப்பதும், அதன் ஒடுக்குமுறை கருவிகளான ராணுவம், பொலிஸ், அரசு கட்டமைப்புகளை தாக்குவது தான் முதன்மையாகவும் அதற்கடுத்து தான் ஆசாதி வருகிறது என்கிறார்கள். இந்த புதிய விதையின் விளைச்சல் தான் புர்ஹான் வானி.

தனது 16 ஆவது வயதில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு பத்து நாட்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியேறுகிறான் புர்ஹான். ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பில் சேர்கிறான். அவன் தலைக்கு இந்திய அரசு 10 லட்சம் ரூபாய் விலை வைக்கிறது. தன்னு டைய 21 ஆவது வயதில் அந்த அமைப்பின் முக்கிய தளபதியாக கொல்லப்படுகிறான். தீவிரவாதியாக கொல்லப்பட்டவனின் இறுதிச் சடங்கு புகைப்படங்களை இணையத்தில் தேடி பாருங்கள். ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி அழுகிறார்கள், முழக்கமிடுகிறார்கள், மசூதிகளில் அவன் மரணத்திற்காக தொழுகை நடக்கிறது, காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் போராட்டம் வெடித்துள்ளது, கற்கள் வீசப்படுகின்றன, ராணுவ முகாம்கள் தாக்கப்பட்டுள்ளன, இணைய சேவையை அரசு முடக்கியுள்ளது. பத்துக் கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் இதுவரை ராணுவத் தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

## போருக்கு புதிய முகம் கொடுத்தவன்

ஏன் இத்தனை கொந்தளிப்பு? வெறும் 21 வயது 'தீவிரவாதி' கொல்லப்பட்டதற்காகவா இவ்வளவும் நடக்கிறது? அப்படி தன் வாழ்நாளில் அவன் என்ன தான் செய்துவிட்டான் அந்த மக்களுக்காக?

அவன் பெரிதாக எதுவும் செய்யவில்லை. அம் மக்களுக்கு நம்பிக்கைய்ய தந்துள்ளான். காஷ்மீரிகளின் போராட்டத்திற்கு புதிய முகம் கொடுத்துள்ளான். கடந்த ஐந்தாண்டுகளில் இணையத்தில் பரவலாக தொடர்பு வைத்திருந்தான் புர்ஹான். காஷ்மீர் பள்ளத்தாக்கின் காடுகளில் தன் தோழர்களுடன் பயிற்சி எடுப்பது, கிரிக்கெட் விளையாடுவது, குழுவினரோடு படம், பேட்டி என அதன் காணொளிகள், புகைப்படங்கள் இணையத்தில் வெளியிட்டான். மிக சமீபமான ஒரு வீடியோவில் ராணுவத்தையும் பொலிசையும் எச்சரித்தும், அவர்களைக் குறித்து ஒரு பட்டியல் தயார் செய்ய வேண்டும் என்று பேசியுள்ளான். பேஸ்புக்கில் இப்போதும் அவை கிடைக்கின்றன.

சர்வ வல்லமை பொருந்திய இந்திய அரசை எதிர்க்கும் துணிச்சலை மக்களிடம் ஏற்படுத்தினான். ராணுவத்தால் பெண்கள் பாதிக்கப்பட்டாலோ, போலியாக தீவிரவாதியென இளைஞர்கள்கொல்லப்பட்டாலோ ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண்களும் வீதியில் இறங்குகிறார்கள். ராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையே சண்டை நடைபெறும் இடங்களில் போராளிகளை பாதுகாக்க பொதுமக்கள் ராணுவத்தின் மீது கல்லெறிகிறார்கள், ராணுவ வாகனங்களைச் சிறைப்பிடிக்கிறார்கள். இதற்குமுன்பு இது போல் மக்கள் செயல்பட்டதில்லை என்று அரசே சொல்கிறது. இப்போது 16லிருந்து 30 வயதுக்கும் குறைவாகவே உள்ள இளைஞர்கள் தான் போராட்ட பாதைக்கு அதிகம் வந்துள்ளனர். புர்ஹான் அவர்களுக்கு ஒரு ஆதர்ச நாயகனாகவே இருக்கிறான். ஆதிக்க எதிர்ப்பின் அடையாளமாக மாறியுள்ளான். நாட்டுப்புற கதைகளின் நாயகனைப் போல் மக்கள் அவனை கொண்டாடுகின்றனர். காஷ்மீர் பள்ளத்தாக்கில் அவனைப் பற்றிய சாகச கதைகள் ஏராளம் உண்டு. புர்ஹான் வானியின் தந்தை சில மாதங்களுக்கு முன்பு ஒரு பேட்டியில் சொல்கிறார் "காஷ்மீர் போராளிகளின் சராசரி வாழ்க்கை அளவு 7 வருடம் தான். என் மகன் 6 வருடங்கள் வாழ்ந்துவிட்டான். விரைவில் அவன் இறந்தால், இந்த வீட்டிற்கு அவன் ஒரு ஷாஹித்தாக (உயிர் தியாகம் செய்தவர்) தான் திரும்ப வேண்டும்". இன்று அவ்வாறே திரும்பியுள்ளான்.

## அதிகாரத்தை நோக்கி எழும் கேள்விகள்

காஷ்மீரில் ஊரடங்கு உத்தரவு, இணைய சேவை துண்டிப்பு, ஆங்காங்கே கலவரம் என்று சொல்லி வெறிச்சோடி கிடக்கும் சாலைகளையும், நடுவே மறித்து போடப்பட்டிருக்கும் தடுப்பு கம்பிகளையும் அடைக்கப்பட்ட கடைகளையும் அருகே துப்பாக்கி ஏந்தி நிற்கும் ராணுவத்தையும் தான் ஊடகங்கள் நமக்கு காட்டுகின்றன. இந்திய அரசின் உத்தரவு அப்படி. ஆனால் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து நிற்கும் காலகட்டத்தில் இன்னும் எவ்வளவு காலகட்டத்திற்கு இவர்கள் பொய் சொல்லி திரிவார்கள். நாமும் 'பாகிஸ்தான் தீவிரவாதிகள்' என்று நம்பிக் கொண்டிருப்போம். தேடுங்கள். படியுங்கள். கேளுங்கள். பாருங்கள். ஒரு பெரும் மக்கள் கூட்டம் நம் பெயரில், இந்தியாவின் பெயரில் ஒடுக்கப்பட்டு, நசுக்கப் பட்டு கிடக்கிறது. துப்பாக்கி முனையில், அமைதி என்ற பெயரில் வளர்ந்த ஒரு தலைமுறை அதை கேள்வியெழுப்பத் தொடங்கியுள்ளது.

ஷாஹித் புர்ஹான் வானிக்கு வீரவணக்கம்.

# வடக்கு விமான நிலையம்: அங்கா இங்கா ?





சிக்மலிங்கம் றெஜினோல்ட்

இன்னொரு வில்லங்கமான விசயத்தைப் பற்றி இந்தப் பக்கத்தில் கதைக்க முற்படுகிறதுக்கு மன்னிக்க வேணும்.
இப்பதான் வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையத்தை எங்க அமைக்கிறது என்ற பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்திருக்கு. அதுக்கிடையில இன்னொரு பிரச்சினையா? என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், சில விசயங்களைப் பேசித்தானே தீர வேணும். ஆம், பேசாப்பொருளைப் பேசத்துணிந்தேன்.

• • •

வடக்கிற்கான விமான நிலையத்தை எங்கே அமைக்கலாம்?

இப்பொழுது இந்தியாவுக்குப் போவதற்கே யாழ்ப்பாணத்திலிருந்து, கட்டுநாயக்காவுக்குப் போய், அங்கிருந்துதான் விமானம் எடுக்க வேணும். இந்தியாவிலிருந்து வருவதாக இருந்தாலும் இதுதான் றூட். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கதை வேறு. யாழ்ப்பாணத்திலிருந்து பலாலிக்குப் போனால், அங்கிருந்து திருச்சிக்கோ, சென்னைக்கோ நேரடியாகப் போகலாம்.
தலைமன்னாருக்குப் போனால் கப்பலில் இராமேஸ்வரத்தின் வழியாகப்போய் வரலாம். ஆனால், அந்த நாட்களில் பெரிய அளவில் விமானப்பயணமெல்லாம் கிடையாது. மிகச் சிலர்தான் விமானமேறுவார்கள். அநேகமாக யாத்திரைக்குப்போவார்கள். அல்லது படிப்பிற்காக. அல்லது வியாபாரத்துக்காக. அபூர்வமாகச் சிலர் மருத்துவத்துக்காக. இப்போதையைப் போல கல்யாணம், காட்சி அது இது என்று பல காரணங்களுக்காகப் போய் வருவதெல்லாம் அன்றில்லை. அதெல்லாம் பொய்யாய்ப் பழங் கதையாகிப் போனது.

### பலாலி - ஒரு பழங்கதை

பலாலியில் பொதுமக்களின் காணியை அபகரிக்காமல் விமான நிலையம் இருந்த போது, பயண வழி திறந்திருந்தது. இது 1983 க்கு முன்பு. அப்பொழுது, அதிக செலவில்லாமல், அலைச்சலில்லாமல் விமானத்தில் போய்வரலாம். அப்படித்தான் பலரும் போய் வந்தனர். விமான நிலைய வளாகம் ஒன்றும் பெரிய பாதுகாப்பு வலயங்களால் சூழப்பட்டிருக்கவில்லை.
விமான நிலையத்தின் ஓரத்தில், மின்னொளியில் நாங்கள் கரப்பந்தாட்டம் கூட ஆடியிருக்கிறோம் என்றால் பாருங்களேன். அப்படியொரு காலம் இருந்தது.

இப்ப விமான நிலையத்துக்குக் கிட்டவும் போக முடியாது. விமான நிலையத்துக்கு என்று சனங்களின் ஏராளமான காணிகளைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். காணியைப் பறிகொடுத்த சனங்களும் சரி, அக்கம் பக்கத்திலிருந்தவர்களும் சரி பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்பைத்தவிர வேறு எங்கும் நேரடியாகப் போய் வர முடியாது. அப்படிப் போய் வருவதற்கே கெடுபிடிகள் வேறு. யுத்தம் முடிந்தாலும் இந்தச் சந்நதம் முடியேல்ல.

### பறப்பவர்கள் அதிகம்

வெளியே விமானமேறிப் போவதாக இருந்தால் தலையைச் சுத்தி மூக்கைத் தொடவேணும். அதுதான் முன்னரே சொன்னதைப்போல யாழ்ப்பாணத்திலி ருந்து கட்டு நாயக்காவுக்குப் போய்த்தான் விமானம் ஏற வேணும். இதற்கு ஆகிற செலவு, பயணத்தில் போகிற நேரம்.. எல்லாம் அதிகம். ஆனால், முன்னரை விட இப்பொழுது வடபகுதி மக்கள் அதிகமாக விமானப்பயணங்களைச் செய்கிறார்கள். நாட்டில் அதிகமாக விமானப் பயணங்களைச் செய்கிறவர் களாகவும் இவர்களே உள்ளனர். பலர் இந்தியாவுக்குப் போய்



வருகிறார்கள். முன்னரை விட இப்பொழுது இந்தியத் தொடர்புகளும் கூடிவிட்டது. வடக்கிலிருந்த பெரும்பாலானவர்கள், உலகமெங்கும் சிதறிப் புலம்பெயர்ந்திருக்கிறார்கள். புலம்பெயர்ந்து போனவர்கள் விடுமுறைக்கும் விசேட தேவைகளுக்கும் கொண்டாட்டங் களுக்குமென்று அடிக்கடி வந்து போகிறார்கள்.

இவர்கள் எல்லாம் என்ன வண்டி வாகனத்திலா போய் வரமுடியும்? எல்லோருக்கும் விமானப் பயணமே. உலகத்தின் திசைகள், திக்குகளில் இருந்தெல்லாம் வந்து கட்டுநாயக்காவில்தான் இறங்கு கிறார்கள். பிறகு அங்கிருந்தே வடக்குக்கு வருகிறார்கள். அவர்களை வரவேற்கப் போகிற உறவினர்கள் ஒரு இரவுப் பயணம் செய்யவேணும். அல்லது ஒரு பகலைச் செலவழிக்கி றார்கள். இதற்குள் ஆகிற, போகிற செலவு வேறு. ஆனால் வேறு வழியில்லை. போய்த்தான் ஆக வேணும். தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டுத்தான் தீர வேணும்.

### இலங்கை விதிவிலக்கே

இதைப்போல ஒரு விசர்த்தனம் உலகத்தில் வேறு எங்கும் இருக்குமா என்று தெரியவில்லை. இன்று உலகம் சுருங்கி விட்டது. நேரமே வாழ்க்கையின் இயக்கம் என்கிறார்கள். எவ்வளவுக்குக் குறைந்தளவு நேரத்தை ஒவ்வொன்றுக்கும் பயன்படுத்து கிறோமோ அந்தளவுக்கு வளர்ச்சி என்பது விதி. இதனால் தொடர் பாடலையும் பயணங்களையும் விரைவுபடுத்தியி ருக்கிறது உலகம். ஆனால், இலங்கையில்? இலங்கை எப்போதும் விதிவிலக்காகவே இருப்பதுண்டு. ஒன்று அதிகாரத்தைக் குவித்து வைத்திருக்கும். அல்லது அச்சத்தில் அல்லாடும். இதனால், நாடு முழுவதற்கும் ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்தை வைத்துக் கொண்டு மல்லாடுகிறது இலங்கை. மகிந்த ராஜபக்ஸ இன்னொரு சர்வதேச விமான நிலையத்தைக் கட்டவேணும் என்று காட்டை அழித்து, மத்தலவில் பறவைகள் சரணலாயப்பகுதியில் விமானங்களைப் பறக்க விட்டார். கடைசியில் விமானங்களும் பறக்கவில்லை. பறவைகளும் பறக்கவில்லை. அதை நெல்லடுக்கி வைக்கும் களஞ்சியமாக மாற்றினார்கள் புதிய ஆட்சியாளர்கள்.

### தேவை இன்னொரு விமான நிலையம்

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நாடு முழுவதும் வெள்ளத்தில் சிக்கியிருந்ததல்லவா. அப்பொழுது கட்டுநாயக்கா விமான நிலையத் துக்குள்ளும் வெள்ளம் புகுந்து விட்டது. வேறுவழியில்லாமல் ஒரு தொகுதி விமானங்கள் அவசர அவசரமாக மத்தலவுக்குத் திருப்பி விடப்பட்டன. ஏனையவை சென்னைக்கு அனுப்பப்பட்டன.

அப்பொழுது பலரும் உணர்ந்தார்கள், நாட்டில் வேறு பிரதேசங்களிலும் சர்வதேச விமான நிலையங்கள் அமைக்கப்பட வேணும். ஒரு மாற்றாக, அவசர தேவைகளுக்காகவாவது அது தேவை என்று.

இதைவிட, அடுத்த மாதங்களில் கட்டுநாயக்க விமானநிலையம் புனரமைக்கப்படவுள்ளதாக வேறு தகவல். அப்படிப் புனரமைப்பு வேலைகள் நடக்கும் போது விமான நிலைய இயங்கு நேரத்தைக் குறைக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கு. இது நாட்டுக்குப் பெரும் பொருளாதார இழப்பை வேறு தரப்போகிறது. எனவே, எதிர்காலத் தேவைகளுக்காக அப்படி ஒரு மாற்று விமான நிலையம் அமைக்கப்படுவதாக இருந்தால் அதை எங்கே அமைப்பது?

பெரும்பாலும் அது வடக்கில் அமைந்தால் சிறப்பு. அதிக பயனுடையதாகவும் இருக்கும். மத்தலவிற்குக் கொட்டிய காசில் பாதியை வைத்தே அதை வடக்கில் உருவாக்கி விடலாம். ஆட்கள் வந்து போவது மட்டுமல்ல, வடக்கின் உற்பத்திப் பொருட்களை, நேரடியாகவே புலம்பெயர் நாகளுக்கு அனுப்பக் கூடியதாகவும் இருக்கும். அங்கிருந்து இங்கே முதலிடுகின்றவர்களின் தொகையும் கூடும். பயணமும் தொடர்பும் இலகுவாக இருந்தால் தொழிலும் துறையும் விருத்தியடையும் என்பார்கள். ஆகவே வடக்கே ஒரு சர்வதேச விமான நிலையம் வருவது அவசியமே.

ஆனால், அந்த விமான நிலையத்தை எங்கே அமைப்பது? இதுதான் பிரச்சினையே. வடக்கிலே ஒரு விமான நிலையத்தை அமைப்பதென்றால், அதற்கான இடத்தைத் தீர்மானிப்பதே.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# நல்லூரில் 'முருகசேனா!' அட்டகாசம்

வேலும் மயிலும்

**இப்ப காணி பிடிக்கிறதுதான் எல்லாருக்கும் பொதுவான வேலை. அந்த வேலையில இப்ப நல்லூர் முருகனும் களத்தில இறங்கி எல்லைக் கோடு போட்டிருக்கிறார். கதிர்காமத்தை மாதிரி புத்தர் வந்து இங்கையும் காணி பிடிச்சுப் போடுவார் எண்டு அவருக்கும் பயம் இருக்கும் தானே. பயம் இருக்கிறது பிரச்சினை இல்லை. ஆனா மற்றவையைப் பயப்பிடுத்த தனக்கு கீழ ஒரு அடிபிடிக் கூட்டத்தை- சிவசேனா, பொதுபலசேனா போல- ஒரு முருகசேனா தொண்டர் படையை வைச்சிருக்கிறது தான் பிரச்சினை. திருவிழா வாறபடியால இப்பவே முருகனார் தன்ர எல்லையைச் சுத்தி சேவல் கொடியை பறக்க விட்டுட்டார். 08 -07 -2016 அன்று இவரது எல்லைக்குள் நடந்த சம்பவத்தை ஒருக்கா நீங்களும் கேளுங்கோ.**



இப்போதைய இளைஞர்கள் வன்முறை மீதே விருப்பம் கொண்டவர்கள் என்பதே பொதுவான கருத்து. ஆனால் எல்லோரும் அப்படியல்ல. சமூக அக்கறை கொண்டவர்களும் இருக்கிறோம் என்று நிரூபிக்கும் இளைஞர், யுவதிகளும் இருக்கவே செய்கிறார்கள். அப்படிப்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் அமைப்பு ஒன்றின் ஊடாக நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகில் உள்ள மண்டபத்தில் இரத்ததான நிகழ்வொன்றை ஒருங்கிணைத்தனர். அதன் போது மக்களுக்கு விழிப்புணர்வூட்டவென ஒரு சிறிய பதாகையை அருகில் இருந்த மின்கம்பத்திற்கும் அவர்களது எல்லை பிடி கொடிக் கம்பிக்கும் இடையில் கட்டிவிட்டனர். அந்தப் பதாகை ஒன்றும் எந்தவொரு கட்சிக்கும் வக்காலத்து வாங்குவதாகவோ அல்லது ஏதேனும் பொருளை விளம்பரப்படுத்துவதாகவோ இருக்கவில்லை. உயிர் காக்கும் இரத்த தானம் பற்றிய ஒரு அறிவிப்புக் கொண்ட பதாகை. அவ்வளவுதான், படையப்பா படத்தில் ஒரு காளைக்கு சிவப்பு வர்ணத்தைக் கண்டால் மூர்க்க குணம் வருமே அதேபோல பாதகையின் சிவப்பு வர்ணம் அங்கு நின்றிருந்த 'முருகசேனா' உறுப்பினர் ஒருவருக்கு கொதிப்பைக் கிளப்பிவிட்டது போலும்.

"ஆரடா இதைக் கொண்டு வந்து முருகன்ர எல்லைக்க கட்டினது?" என்று வேட்டியை மடித்துக் கட்டியபடி, நெற்றியில் நீறிட்ட அவர் கத்தினார்.

"இப்ப கழட்ட வேணும். இல்லாட்டி முருகனுக்கு கோபம் வந்திடும்" என்று கலையாடும் பூசாரி போல குறி சொன்னார். பதாகையைக் கட்டிய இளைஞர்கள் திகைத்து நின்றனர். "இரத்ததானம் செய்வதை பார்த்து சாமி கோபப்படுமா?" அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

குறிசொன்ன முருக சேனாக்காரர் கத்திக் கொண்டே அப்பால் செல்ல, தள்ளாடியபடி அதே இடத்துக்கு யாழ்ப்பாணத்தின் பெருமையைப் பறைசாற்றியபடி ஒரு இளைய "குடிமகன்" நிறைவெறியில் தனக்கே உரிய தள்ளாட்டத்தோடு வந்தார். வந்த குடிமகனார் அப்படியே பதாகை கட்டிக் கிடந்த கம்பத்துக்கு கீழே மல்லாக்க விழுந்து, தியானத்தில் ஆழ்ந்தார். அவரின் உள்ளாடைகள் போவோர் வருவோர்க்கெல்லாம் காட்சி கொடுத்து மெய்சிலிர்க்க வைத்தன. குடிமகனாரின் வாயிலிருந்து "திவ்விய தூஷணங்கள்" புறப்பட்டு கோயில் சூழலை பக்தி மயமாக்கியதோடு, காது கொடுத்துக் கேட்போரை களிப்புற வைத்தன. வீதிக்கு குறுக்கே மதிய வேளையிலும் அங்கப்பிரதிட்டை செய்தபடி, தூஷண மந்திரங்களை செபிக்கும் குடிமகனாரை பதாகை கட்டிய இளைஞர்களும், பொது மக்கள் சிலரும் ஒரு ஓரமாக நகர்த்தி "தெய்வ நிந்தனை" செய்து விட்டனர்.

அப்போது கையில் அரையடிக் கத்தியுடன் இரண்டு முருகசேனா வீரர்கள் வேக வேகமாக வந்தனர். அங்கிருந்தவர்களுக்கு நெஞ்சு "திக்" என்றிருந்தது. குடிமகனாரை ஒரு வழி பண்ணப் போகிறார்கள் என்று ஏங்கினர். அவர்கள் வந்த வேகத்துக்கு எதிரில் இருந்தவர்கள் ஏதாவது கேட்டிருந்தால் என்ன ஆகியிருக்குமோ தெரியாது. ஒரே பாய்ச்சலில் குடிமகனாரைக் கடந்தவர்கள் கத்தியை ஓங்கினர். எல்லோரும் அடுத்து நடப்பதைக் காணச் சகியாதவர்களாகக் கண்ணை இறுக்க மூடினர். பின்னர் அவர்கள் கண்ணைத் திறந்தபோது வெற்றிச் சிரிப்போடு முருகசேனா வீரர்கள் நின்றார்கள். அவர்களின் காலடியில் "இரத்ததான" விழிப்புணர்வுப் பதாகை அறுந்து கிடந்தது.



"நாங்களே இப்ப தான் கொடி கட்டியிருக்கிறம் அதுக்குள்ள ஆர்ரா இதை கொடிக் கம்பத்தடியில் கட்டினது? ஆரும் இனி இப்பிடிக் கட்டினியள் எண்டா நடக்கிறது வேற. கோயில் வீதியில் இப்பிடி கழிசறை வேலையள் நடக்க நாங்கள் இடம் குடுக்க மாட்டம்" என்று சொல்லிக் கொண்டே குடிமகனாரைக் கடந்து கோயில் பக்கமாக விரைந்து போனார்கள் வீரர்கள்.

குடிமகனார் தூஷண மந்திரத்தை இன்னும் உரக்கச் சொன்னபடியே தியானத்தில் பிரண்டு கிடந்தார்.

நல்லூரானுக்கு அரோகரா ! அரோகரா !


## நீங்களும் எழுதுங்கள்!

'புதுவிதி' வார சஞ்சிகையில் உங்கள் படைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? தயக்கம் வேண்டாம். சிறுகதை, கவிதை, கட்டுரை, பத்தி எழுத்து, நிகழ்வுக் குறிப்பு எதுவாயினும் எழுதி அனுப்புங்கள். தரமான படைப்புகள் புதுவிதியில் பிரசுரமாக களம் அமைத்துக் கொடுக்கப்படும். படைப்புகளை தபால்/மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## இழுபறி அரசியல்...

ஒரு குரங்கும் இரண்டு பூனைக்குட்டிகளும் நடந்து போய்க் கொண்டிருந்தன. மூன்றுக்கும் நல்ல பசி. அதிர்ஷ்ட வசமாக அவர்களுக்கெதிரே ஒரு பணிஸ் விழுந்து கிடந்தது. மூவருக்குள்ளும் அதை எடுத்து உண்பது யார் என்ற எண்ணம் முளைத்தது. குரங்குக்கு வாய் ஊறினாலும், ஆசையை அடக்கிக் கொண்டு நல்ல பிள்ளை போல, அந்த பணிஸை பூனைக் குட்டிகளிடமே கொடுத்து பகிர்ந்து உண்ணச் சொன்னது.

பூனைக்குட்டிகளுக்கு நல்ல சந்தோஷம். குரங்கின் விட்டுக் கொடுப்பை பாராட்டியபடியே பணிஸை இரண்டாகப் பிய்த்தன. ஆனால் அந்தப் பகிர்வில் இரண்டு பூனைக்குட்டிகளுக்கும் திருப்தியில்லை. இரண்டும் மாறி மாறி "உன்ரை துண்டுதான் பெரிசு. மரியாதையா அதை என்னட்டைத் தா" என்று கத்தின.

பின்னர் கட்டிப்புரண்டு சண்டை போட்டன. இப்படி நடக்குமென்று முன்னரே எதிர்பார்த்த குரங்கு கொடுப்புக்குள் சிரித்தபடி "நண்பர்களே! எதற்கு உங்களுக்குள் வீண் சண்டை? என்னிடம் பணிஸைத் தாருங்கள் நான் சரிசமமாக தருகிறேன்" என்றது. பூனைகளுக்கும் இந்த யோசனை சரியாகப்பட்டது. தராசு ஒன்றில் குரங்கு பணிஸ் துண்டுகளைப் போட்டு எடை பார்த்தது. ஒரு பக்கம் கொஞ்சம் தாழவே செய்தது. எனவே அந்தப் பக்கத்திலிருந்த பணிஸில் ஒரு கடி கடித்து மீண்டும் தட்டில் போட்டது. இப்போது மறு பக்கம் தாழ்ந்தது. அந்தத் தட்டில் உள்ள பணிஸைக் கடித்து தட்டில் போட, எதிர்ப்புறம் தாழ்ந்தது. இப்படி மாறி மாறி தட்டுகள் தாழ்வதும், குரங்கு அதை கடித்து உண்டு விட்டு போடுவதும் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் தட்டுகள் இரண்டும் சமநிலையை அடைந்தன. பூனைக்குட்டிகள் சந்தோஷத்தோடு தட்டுகளை எட்டிப் பார்த்தன. இரு தட்டுகளும் வெறுமையாகிக் கிடந்தன. குரங்கு ஏப்பம் ஒன்றை விட்டபடி நடையைக் கட்டியது.

இந்தக் கதையைப் படிக்கும் போது பலருக்கும் கூட்டமைப்பும் வவுனியா பொருளாதார மத்திய நிலையமும் நினைவுக்கு வரலாம். எப்படி பூனைக்குட்டிகள் இரண்டும் தங்களுக்கு கிடைக்கவேண்டிய உணவை சகோதரச் சண்டையால் குரங்கிடம் பறி கொடுத்தார்களே, அதே போன்ற ஒரு நிலையே வவுனியா பொருளாதார மத்திய நிலைய விவகாரத்திலும் தோன்றியிருந்தது.

தாண்டிக்குளத்தில் தான் பொருளாதார மத்திய நிலையம் அமைய வேண்டும் எனவும் ஒரு அணியும், இல்லை... இல்லை.. ஓமந்தையில் தான் அமைய வேண்டும் என இன்னொரு அணியுமாக கூட்டமைப்பினர் உலக யுத்தம் போன்று கருத்துகளால் மோதிக்கொண்டார்கள். இரு தரப்பும் எந்தவொரு விட்டுக்கொடுப்புக்கும் தயாராக இருக்கவில்லை.


கடைசியில் உட்கட்சி வாக்கெடுப்பு வரை நிலைமை கைமீறிப்போனது. வாக்கெடுப்பு முடிவடைந்த பின்பும் கூட்டமைப்பு தெளிவான முடிவை எடுத்தபாடாக இல்லை. வடக்கு முதலமைச்சரே இறுதி முடிவை எடுக்கட்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராசாவும் சொல்லியிருக்கிறார்கள்.அதன் பின்பு கூட இழுபறி நீடிக்கத்தான் செய்கிறது.

இத்தகைய சாதாரண விடயத்துக்குக் கூட ஏற்பட்ட உள்வீட்டு இழுபறிகள், உட்கட்சி வாக்கெடுப்புகள் என்பனவெல்லாம் மக்களிடத்தே கூட்டமைப்பு மீதான அதிருப்தியை அதிகரிக்கவே செய்துள்ளன. இதற்காகவா கூட்டமைப்புக்கு வாக்களித்தோம் என்ற சலிப்பு பலரிடத்தே உண்டாகி உள்ளது. ஒரு பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்காக ஒன்றுபடாதவர்களால் இனப் பிரச்சனை தீர்வு விடயத்தில் எப்படி ஒருமித்த முடிவுக்கு வரமுடியும் என்று மக்கள் கேள்வியெழுப்புகிறார்கள். மக்களை மறந்து அரசியல் செய்வதால் பாதிப்பு அரசியல் வாதிகளுக்குத் தானே அன்றி, மக்களுக்கல்ல.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!

# நிழல் அரசும் போரும்

அரவான்



என்னதான் நவீனத்துவம் எங்கள் வாழ்வியலுக்குள் புகுந்து, வேறொரு "டிசைனைக்" கொடுத்து விட்டாலும், சில விடயங்கள் மாறிக் கொள்ளாமல் அப்படியே தொடரவும் செய்கின்றன. அதிலும் குழந்தைகளின் உலகில் நவீனத்துவம் கொஞ்சம் எட்டியே நிற்கவேண்டியுள்ளது. அப்படிப்பட்ட சிறுவர்களின் விளையாட்டுலகில், 'சோறு, கறி சமைத்தல்', 'கடை வைத்தல்', கலியாணம் கட்டுதல், 'பொம்மையை குழந்தையாக உருவகித்து பராமரித்தல்' 'தோட்டம் செய்தல்' போன்றன முக்கியமானவை. இந்த விளையாட்டுகளை சிறுவர்களுக்கு எவரும் சொல்லிக் கொடுப்பதில்லை. தங்களுடைய குடும்பத்தில் பெரியவர்கள் செய்வதைப் போல தாங்களும் செய்ய வேண்டும் என்ற உந்தல் அவர்களை இப்படியான விளையாட்டுகளுக்குள் தள்ளி விடுகின்றன. உண்மையில் தோட்டக்காரனாகவோ, அம்மாவாகவோ, கடைக்காரனாகவோ இருக்க வேண்டும் என்ற குழந்தைகள் தமது அவாவை, இப்படியான 'போலச் செய்தல்' மூலமாக தாம் அப்படியான நிலையில் கணப்பொழுதேனும் கற்பனையாக வாழ்ந்து அவர்கள் தீர்த்துக் கொள்கிறார்கள். கிட்டத் தட்ட அது ஒரு நிழல் வாழ்க்கை.

### ருசி கண்ட பூனைகள்

நிழல் அரசு, போர் என்றெல்லாம் தலைப்பு வைத்துவிட்டு, எதற்கு குழந்தைகளின் விளையாட்டுலகம் பற்றி நீட்டி முழக்கப்படுகிறது என்று பலரும் எண்ணலாம். அப்படி ஒரு அறிமுகம் செய்வதற்கான காரணத்தை இலங்கையின் ஒருநாள் நிழல் அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதிகாரத்தை பரம்பரை பம்பரையாக ருசிக்கலாம் என்று கனவு கண்டிருந்த ராஜபக்ஷ குடும்பம், அந்தக் கனவு இடை நடுவிலேயே கலைந்து போனதால் இன்னும் நிதானத்துக்கு வரமுடியாமல் தள்ளாடுகின்றது. ருசி கண்ட பூனைகள் எப்படி அடுப்பங்கரை நினைவுகளை இழக்க முடியும்? திரும்பவும் எப்படியாவது அடுப்பங்கரைக்குச் செல்லத்தானே முனையும். தேர்தலுக்குப் பின்னர் ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசு அமைத்ததால், மஹிந்தவே எதிர்பாராத வகையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட கிட்டாமல் போனது.

தேர்தலில் தோற்றாலும் எதிர்கட்சித் தலைவராக இருந்து, அரசைக் குழப்பலாம் என்பதே மஹிந்தவின் திட்டமாக இருந்தது. ஆனால் மைத்திரி-ரணில் எனும் குள்ளநரிகளின் சாணக்கியத்தால், தேசிய அரசு நிறுவப்பட்டது. எதிர்க்கட்சி அந்தஸ்தும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் கூட்டமைப்புக்கு கிடைத்தன. இந்த ஆத்திரத்தில் தான், நிழல் எதிர்க்கட்சி ஒன்றை மஹிந்த தன் கூட்டாளிகளுடன் இணைந்து அமைத்தார். 'கூட்டு எதிர்க் கட்சி' என்ற நாமத்தோடு, அரசுக்கு எதிரான போராட்டங்களில் மஹிந்த அணி இறங்கியது. ஆனால் அதற்கும் மைத்திரி மசியவில்லை. மஹிந்த அணியில் இருந்தவர்களுக்கு 'அமைச்சுப் பதவி' தூண்டிலைப் போட்டார். சில மீன்கள் சிக்கின. மஹிந்த தரப்பின் பலம் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது. அத்தோடு முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற கொலைகள், ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான விசாரணைகளும் முடுக்கி விடப்பட்டன.

### இருவேறு வியூகங்கள்


ஒருபக்கம் நல்லாட்சி அரசைக் கவிழ்ப்பதற்கான தாக்குதல் நடவடிக்கையிலும், இன்னொரு புறத்தில் விசாரணைகளில் தங்களின் தலைகள் சிக்காமல் இருப்பதற்கான தற்காப்பு வியூகத்திலும் இருக்க வேண்டிய சிக்கலான நிலை மஹிந்த அணிக்கு ஏற்பட்டது. ஏனென்றால் கூட்டு எதிரணியின் முக்கிய தலைகள் அத்தனை பேரையும், சிறைக்குள் தள்ளி, மிகக் கடுமையான தண்டனைகளை வழங்கக் கூடியளவுக்கு ஆதாரங்கள் நல்லாட்சி அரசிடம் சிக்கி இருந்தன. தப்பித் தவறி உரத்துப் பேசிவிட்டால், அந்தத் தொனியின் அளவுக்கேற்ப மஹிந்த அணியில் உள்ளவர்களில் எவரையேனும் 'தூக்கக் கூடிய' வல்லமை நல்லாட்சி அரசுக்கு இருந்தது.

### அனுதாப அலையால் அச்சம்

அப்படியானால் மஹிந்த அணியை இப்படி ஆட விடாமல், தேர்தல் காலத்தில் சொன்னது போல கட்டுநாயக்க விமான நிலையத்தை ஒருநாள் இழுத்து மூடிவிட்டு, கடந்த ஆட்சியில் குற்றமிழைத்த அத்தனை பேரையும் 'தரதரவென' இழுத்து வந்து, சிறைக்குள் தள்ள வேண்டியதுதானே என்று மக்கள் மனங்களில் கேள்வி எழாமலில்லை. ஆனால் அப்படி மஹிந்த அணியினரைக் கூண்டோடு சிறைக்குள் தள்ளினால், அரசியல் ரீதியாக

(08 ஆம் பக்கம் பார்க்க...)

# அலம்பல் ஆச்சி



இந்த நாட்டிலை ஒருநாளும் நிம்மதியா இருக்க விடாங்கள் ஆக்களை, முந்தியெண்டா அங்கை முன்னேறிப் பாயினை, இஞ்சாலை ஆமிக்கு நல்ல அடியாம், மற்றப் பக்கத்தில தந்திரோபாயமா பின் வாங்கிட்டினமாம் புக்காரா கிபிர் எண்டுதான் முதற்பக்கங்களிலை இருக்கும். இண்டைக்கு பேப்பர் வாங்கிக் கொண்டு வந்து திண்ணையிலை இருந்து தேத்தண்ணியும் குடிச்சோண்டு பேப்பரை பாத்தா.. தேத்தண்ணி தொண்டைக்குள்ள இறங்கு தில்லை. எல்லாம் எங்கடைவாத்திமாரின்ரை திருவிளையாடல்கள் தான். நாய்க்கு நடுக் கடல்லை போனாலும் நக்குத் தண்ணிதானாம்.. குறுக்காலை போவார் வாத்தியாராப் போயிட்ட மெண்டாவது தங்கடை வாலுகளைச் சுருட்டிக் கொண்டு இருக்கிறது தானே. வெக்கங்கெட்ட வேலையளடாப்பா உதெல்லாம்.. முந்தியெண்டா ஊரிலை ஒரு வாத்தியார் இருந்தா அவர் தான் ஊருக்கே மாஸ்ரர்.. வாத்திமாரை வழி தெருவிலை கண்டாலே பெடிபெட்டையளுக்கு காற்சட்டைக்குள்ளாலை மூத்தாபோகும்.. இப்ப?? உது சும்மா விடுற விசயமும் இல்லை. இனி பள்ளிக்கூடப் பிள்ளையளும் உதுதான் சாட்டெண்டு வாத்திமாரை பற்றி தேவையில்லாமை பழிபோடக் கூடிய சந்தர்ப்பமும் வரும். உது நல்லதுக்கில்லை, கண்டியளோ! பிரச்சனையின்ரை வேர் எங்கையெண்டு பாக்கோணும். இப்ப இருக்கிற வாத்திமாரெல்லாரும் கூடுதலா கம்பசிலையும், கொலிச்சிலையும் படிச்சவைதானே. உங்கை கம்பசிலை பொம்பிளைப் பிள்ளையள் சீலை கட்டுறதோ, இல்லையோ எண்ட விதண்டா வாதங்களைக் கதைக்கிற நேரத்திலை தங்கள் தங்களின்ரை சுய ஒழுக்கங்களிலையும் கவனம் செலுத்தினா உந்தப் பிரச்சினையளை தவிர்க்கலாம்.. அதை விட்டுட்டு பொம்பிளைப் பிள்ளையளின்ரை சீலைக்கைதான் கலாசாரம் இருக்கெண்டு சொல்லிக்கொண்டிருந்திட்டு பள்ளிக் கூடங்களுக்கைபோய் வளர்ற பிள்ளை யளை நாசமாக்குங்கோ. நல்ல ஆசிரியர்களைத் தந்த யாழ்ப்பாணத்தின்ரை பேரையும் நாசமாக்கி... என்னத்தைச் சொல்லுறது? கழிசடைக் கூட்டம்...

ஆனா உதிலை ஏதோ ஒரு விசயமும் இருக்கெண்டு என்ரை ஏழாம் அறிவுக்கு தென்படுது.. இவ்வளா காலமும் இல்லாமை எப்பிடி அடிக்கடி மாணவிமாரும் வாத்திமாரும் புடுங்குப்படுகினை? உண்மையா அப்பிடி நடக்குதா..? இல்லாட்டி அங்கினேக்கை நடக்கிற ஒண்டு இரண்டை வைச்சுக் கொண்டு மிச்சக்கதையள் கட்டுப்படுதோ? அப்பிடி கதைகட்டுறதெண்டா.. அவையின்ரை நோக்கம் என்ன? யாழ்ப்பாணம் கல்வியிலை முதலிடம் எண்ட பேருக்கு பின்னாலை இருக்கிற வாத்திமாரை கையாலாகாதவர்களாக்கிற திட்டமோ? எது எப்பிடியிருந்தாலும் பிள்ளையளோடை வாலாட்டுற வாத்திமாற்றை வாலுகளை ஒட்ட நறுக்கிவிட்டா விசயம் முடிஞ்சுது.. பிறகேன்.. அவையை தண்ணியில்லாக் காட்டுக்கு மாத்தி அங்கையும் பிரச்சினைப்படவைப்பான்? உண்ணாணை கேக்கிறன் இடமாற்றம் எண்டுறது சரியான முடிவே??

உதுகளை நினைச்சனெண்டா எனக்கு கெதியிலை கிறுதி வந்து செத்துப் போடுவன் போலை கிடக்கு. என்ரை வல்லிபுரத்தானே என்ரை மக்களை அழிச்சவையின்ரை அழிவைக் கண்ணிலை காட்டாமை என்னை சாக விட்டிடாதையப்பா. புத்தரின்ரை மகன்மார் நல்லா கூத்துப் போடுவினை, கைதாகின செய்திவர முதல் பிணையிலை விடுவிச்ச செய்தி வந்திடுது. எல்லாம் ஒரே குட்டையிலை ஊறினமட்டையள் தானே. ஆரோடை நோகிறது?? மாற்றம் எண்டியள், தீர்வெண்டியள்.. கடைசியிலை ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை.. ஆனா ஆள் வலுகெட்டிக்காரன் என. ஆள் தெளிவாச் சொல்லிப்போட்டுது.

சர்வதேச வியாரணை முடிஞ்சிட்டுதெண்டு எங்கடை தலைவர்கள் மூஞ்சையளை எங்கை கொண்டு போய் வைக்கப் போயினமாம்? முள்ளி வாய்க்கால்லையோ? இல்லாட்டி நந்திக் கடல்லையோ.. தோசையின்ரை திறத்திலை ஆட்டுக் கல்லுக்கொரு மாலையாம். உவையிட்டையே தனிநாடு குடுக்கிறது?? நாட்டைப் பிச்சுப் புடுங்கி நடுத்தெருவுக்கு சீ.. சீ நடுக் கடலுக்கை கொண்டு வந்திடுவாங்கள் சரிமோனையள் ஆச்சி கதிர்காம முருகனிட்டை போப்போறா. வந்து கதைப்பா. போட்டுவாறன் என்ன..

செல்வி

## அம்மா சொல்லும் கதைகளில்...

வேலணையூர் - தாஸ்



அம்மா சொல்லும் கதைகளில்
இந்தப்பரவைக்கடல்
ஓர் ஆழச்சமுத்திரம்
பெரும் அலையெறியும் ஆழ நீர்க்கரை
இதன் கரைகள் நிச்சயமற்றவை
பூதத்தீவிலோ அல்லது நாகவெளியிலோ
முடிவடையக்கூடும்
இதில் படகேறிப்போனவர்கள்
வானவர்களாய் வந்து இறங்கி இருக்கிறார்கள்
பொன்நிறப்பெண்களை
பரிசிலாக கொண்டு வந்து இருக்கிறார்கள்

அம்மா சொல்லுவாள்
பௌர்ணமி காலங்களில்
இந்த தாளை மணற்கரையில்
தெய்வீக கானம் கேட்குமாம்
தோளில் சிறகு முளைத்த
தேவ கன்னியர் நடனம் நடக்குமாம்
அவர்கள் மீன்களாக வந்து
தேவதைகளாக மாறி இருப்பார்களாம்.

அம்மா சொல்லும் கதைகளில்
இது சிறு படகுத் துறையல்ல
பெரும் கப்பல் கரைசேருமிடம்
அரைப் பனையளவுள்ள யவன தேசத்து வணிகர்
வந்திறங்குவார்களாம்.
முத்தும் பவளமும் பட்டுக் குஞ்சரங்களும்
நறுமணத் தைலங்களும்
வெறும் பனாட்டுக்கும்
ஒடியலுக்கும் தந்து போவார்களாம்.

அம்மா சொல்லும் கதைகளில்
எங்களூர் ஐயனார் பற்றிய குறிப்புக்கள் இருக்கும்
நண்டூரும் கரைகளில்
நடுச்சாம வேளைகளில் நடப்பாராம் ஐயனார்
கடலோடிகள் கரைதிரும்புமளவும் காவலிருப்பாராம்.

அம்மா சொல்லுவாள்
இந்த நெய்தல் நிலக்கரைகளில் நீலி திரிவாளாம்
இரவிலே இளைஞரை நெடுந்தொலைவு அழைத்துச் சென்று
சுடலையில் அல்லது காட்டினில்
தனியே விட்டுச் செல்வாளாம்.

## புதிய சொல் - 03

### அறிமுகம்




புதிய சொல் ,கலை இலக்கிய எழுத்துச்செயற்பாட்டுக்கான மூன்றாவதுஇதழ் வெளியாகியுள்ளது. புதிய வகையான இலக்கிய விவாதங்களையும் இலக்கிய வகைமைகளையும் தாங்கி வந்துள்ளது. இதற்கு முதல் வெளியான புதிய சொல் இதழ்கள் இலக்கிய உலகில் பெரும் சர்ச்சைகளையும், அதிர்வுகளையும் உண்டு பண்ணின. இந்த மூன்றாவது இதழ் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெளியாகியுள்ளது. இதழ் ஒன்றின் விலை - 50/-

# யாழ்ப்பாண உலா

## பெயர் சொல்லும் நீச்சல் குளம்



குளம்- யாழ்நகர் எரிபொருள் நிலையத்திற்கு பக்கத்தில்...

யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குப் பக்கத்தில் மாநகர சபைக் கட்டடம் உள்ளது. அதன் பின்னால் தான் மாநகர சபையின் நீச்சல் தடாகம் உள்ளது. அதன் அழகிய புகைப்படங்களை நீங்கள் இப் பக்கத்தில் பார்க்கலாம்.

நீச்சல் தெரியாதவர்களுக்கு உதவியாக நிறைய பிளாஸ்டிக் போத்தல்களைக் கொட்டி அவர்களின் உயிர்மேல் உள்ள அக்கறையை மாநகர சபை வெளிப்படுத்தியுள்ளது. இது ஒரு போற்றத்தக்க செயலாகும்.

மாலை நேரங்களில் கிரிக்கெட் விளையாடுவதற்கு ஏதுவாக குளத்தின் மேலேயே புற்தரை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

டெங்கு, மலேரியா போன்ற நோய்களைத் தடுக்கும் அரிய வகை மூலிகைகளும் இந்தக் குளத்தில் வளர்கின்றன. இதனை மக்கள் சென்று பார்வையிட்டு அதன் சுகந்தமான காற்றையும் ஆரோக்கியமான சூழலையும் அனுபவித்து வளம் பெற வாழ்த்துகிறோம்.

## பொது வைத்தியசாலையைப் பாதுகாக்கும் அகழி

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை மிகவும் அழகானது. அதனை சுற்றி வாசனை நிறைந்த சாக்கடை நதி ஓடுகிறது. பொது மகன் ஒருவர் சொன்னார். “வாசலில் நுளம்பிடம் கடிவாங்கிவிட்டு உள்ளேபோய் வருத்தத்தில் படுக்கும் இடம் தான் வைத்தியசாலை” என்று.

எல்லாவற்றுக்கும் போராடும் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள், தாதியர்கள் எல்லாம் இந்த அகழியால் தான் எதிரிகளிடம் இருந்து தங்களைத் தற்பாதுகாத்துக் கொண்டுள்ளனர். இதைத் தாண்டி நோயில்லாமல் யாராவது உள்ளே வரமுடியுமா? காரில் வருபவர்கள் மட்டுமே தப்பிக்க முடியும். இப்படி ஒரு தொலை நோக்குப் பார்வை கொண்ட வடிகாலமைப்பை நீங்கள் உலகில் வேறு எங்கும் பார்க்க முடியாது.

அந்த அகழிக்குள் சிறிய பயன் மிக்க உயிரினங்கள் வாழ்கின்றன. உதாரணமாக பேத்தைக் குஞ்சுகள், நுளம்புக் குட்டிகள் போன்றன. இந்த அழகிய சூழலை பாதுகாத்து பராமரித்து எங்கள் எதிர்காலச் சந்ததிக்கு கொடுப்போமென்று தலையிலடித்துச் சத்தியம் செய்வோமாக !



கழிவு நீர் வாய்க்கால், ஆஸ்பத்திரி வீதியின் முன்னே...

## என்ன சொல்கிறார் மாநகரசபை ஆணையாளர்?



“வருகின்ற செப்டெம்பர் அல்லது அதற்கு அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள குளங்களை புனரமைப்பு செய்வதற்கான செயற்திட்டம் ஒன்று வர இருக்கிறது அதன் போது முறையான வழியில் குளங்கள் புனரமைப்பு செய்யப்படும்.

வைத்தியசாலை வாய்க்காலைப் பொறுத்தவரையில் மழைக்காலங்களில் கழிவுநீர் வேகமாக அடித்துச் செல்லப் படும். வெயில் காலங்களில் அவை தேங்கித் துர்நாற்றமெடுக்கும் நிலைதான் உள்ளது. இது தொடர்பில் இன்னும் அதிகம் கவனமெடுப்போம்.

மேலும், பொதுமக்கள் இவை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தமது குளங்களில் குப்பைகளைக் கொட்டும் இடங்களாகப் பயன்படுத்தாமல் சுற்றாடலை சீராக பராமரித்தால் மாநகரசபை இவற்றை பராமரிப்பது ஒழுங்காக நடைபெற உதவும்”


- யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. வாகீசன்



மாநகர சபைக் கட்டடத்தொகுதிக்கு அருகில் உள்ள கால்வாய்

# நிழல் அரசும் போரும்

(05 ஆம் பக்க தொடர்ச்சி)





மைத்திரி - ரணில் கூட்டுக்கு எதிரான மனோநிலை மக்களிடத்தே உருவாகலாம். அதேசமயம் மஹிந்த அணியினருக்கான அனுதாப அலை பேரெழுச்சி பெற்று, மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அவர்களை இருத்தி விடலாம். எனவே முள்ளுக்கும் நோகாமல், சேலையும் கிழியாமல் இந்த விடயத்தை அணுகவேண்டிய நிலை மைத்திரி-ரணில் தரப்புக்கு.

இப்படி இருதரப்பும் ஒருவர் மீது ஒருவர் நிழல் யுத்தத்தில் ஈடுபட்டாலும், உள்ளூர சில சமாதான நடவடிக்கைகளும் இடம்பெறாமலில்லை. குறிப்பாக மீண்டும் சுதந்திரக் கட்சியின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக மைத்திரியையும், மஹிந்தவையும் ஒன்றிணைக்கப் பலரும் முயன்றார்கள். தூதுகள் பறந்தன. காதும் காதும் வைத்தாற் போன்று பேச்சுவார்த்தைகள் நடந்தன. எதுவும் பலனளிக்கவில்லை.

### கைப்பிள்ளை - கட்டத்துரை ஒப்பந்தம்

மஹிந்தவும், மைத்திரியும் ஒரே புள்ளியில் இணையாவிட்டாலும் சில விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்தனர் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளிவந்தன. 'நானும் உன் எல்லைக்குள் வரமாட்டேன். நீயும் என் எல்லைக்குள் வரக்கூடாது' என்கிற கைப்பிள்ளை - கட்டத் துரை பாணியிலான எழுதப்படாத ஒப்பந்தம் உருவானது. ஆயினும் இந்த இணக்கப்பாட்டுத் தகவலைப் பலரும் ஆரம்பத்தில் நம்பவில்லை. ஆனால் நாளடைவில் நிகழ்ந்த ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களின் கைதுகளும், உடனடியாக அவர்கள் பிணையில் வெளிவருவதும் 'ஒருவேளை இணக்கப்பாட்டுத் தகவல் உண்மைதானோ' என்கிற சந்தேகத்தை அதிகப்படுத்தியது. அதனை இன்னும் உறுதி செய்வது போல நல்லாட்சி அரசு வந்தவுடன் சூடுபிடித்திருந்த, ஊடவியலாளர்கள் எக்னலிகொட, லசந்த ஆகியோர் தொடர்பிலான விசாரணைகளும், றக்பி வீரர் தாஜுதீன் படுகொலை மீளாய்வும் வேகம் தணிந்து போயின. ஒரு கட்டத்தில் இந்த விசாரணைகள் யாவும் இறுதிப்புள்ளியை அடைந்து, குற்றவாளிகள் இன்றோ நாளையோ கைது செய்யப்படப்போகிறார்கள் என்ற நிலையைக் கூட எட்டியிருந்தன. ஆனால் பிறகு ஒன்றுமே நடக்க வில்லை. எல்லாமே இணக்க ஒப்பந்தத்தின் விளைவுகளே என்று 'விடயம் தெரிந்த' சிலர் தமக்குள் சொல்லிக் கொண்டனர்.

ஆனால் இருதரப்புக்குமான இந்தக் கள்ள உறவு நிலையை குழப்பும் வகையில் அதே தரப்புக்குள் இருக்கும் சில 'ஆர்வக்கோளாறு' அரசியல்வாதிகள் காரியமாற்றி விடுகின்றனர்.

### உதயமானது நிழல் அரசு

"எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி கூட்டு எதிர்க் கட்சி என்று நிழல் எதிர்க்கட்சியாகவே இருப்பது. கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக இருக்கும் போது கூட, நாம் அமைத்த நிழல் எதிர்க்கட்சிக்குத்தானே வீரியம் அதிகம். அதே மாதிரி ஏன் நாம் நல்லாட்சி அரசைவிட வீரியம் மிக்க 'நிழல் அரசை' அமைக்கக் கூடாது?" என்று மஹிந்த அணியில் இருந்த யாரோ 'மூக்குப் புடைப்பாக இருக்கும்' ஒரு அரசியல்வாதி மல்லாக்கப் படுத் திருந்து யோசித்திருக்க வேண்டும். அவ்வளவுதான். அடுத்த நாளே நிழல் அரசு தயார்.கூட்டு எதிர்க்கட்சிக்கு தலைமை தாங்க ஒத்துக் கொண்ட மஹிந்தவுக்கு 'நிழல் அரசின் பிரதமர்' பதவியை அளித்து அவர்கள் அழகு பார்த்தனர். இன்னும் சிலரை ஒவ்வொரு துறைக்கும் அமைச்சர்க ளாக்கினர். இப்படி நிழல் பிரதமர், நிழல் அமைச்சர்கள் என்று 'நிழல் அரசு' பற்றிய அறிவுப்பு ஊடகங்களில் தடல்புடலாக வெளிவந்த பின்னர்தான் மஹிந்தவுக்கே விடயம் தெரிய வந்தது.

### அலறியடித்த மஹிந்த

ஏற்கனவே மைத்திரிக்கும் தனக்கும் இடையிலான கைப்பிள்ளை - கட்டத்துரை ஒப்பந்தத்துக்கு இந்த 'நிழல் அரசு' அறிவிப்பு ஆப்படித்து விடுமே என்ற அச்சம் மஹிந்தவைத் தொற்றிக் கொண்டது. இந்த நிழல் அரசு திட்டத்துக்கு பிள்ளையார் சுழி போட்டவர்கள் மஹிந்தவின் இருப்பிடத்துக்கு அழைக்கப்பட்டு, 'டோஸ்' கொடுக்கப்பட்டார்கள். 'இனிமேல் என்னை அறியாமல் வாய் திறக்கக் கூடாது' என்று அவர்களுக்கு கட்டளையிட்டுவிட்டு, அடுத்த நாள் பொதுக் கூட்டமொன்றில் "ஒரு அரசாங்கத்தின் பிரதமர் பதவியிழந்தால் எப்படி அந்த அரசும் பதவியிழக்கிறதோ, அதேபோல் நிழல் அரசின் பிரதமர் பதவியை நான் ஏற்கவில்லை என்பதால் அந்த நிழல் அரசும் செயலிழந்து விட்டது" என மறைமுகமாக மைத்திரி-ரணில் கூட்டணிக்கு வெள்ளைக்கொடி காட்ட முயன்றார் மஹிந்த. ஆனால் நிழல் அரசு பற்றி எதுவுமே அலட்டிக் கொள்ளாத நல்லாட்சி அரசு, விசாரணைக்கு வந்த நாமல் ராஜபக்ஷவை கைது செய்து தன் கோபத்தைக் குறைக்க முயன்றது.

### திட்டமிடப்பட்ட கைது?

ஏற்கனவே ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த பஷில், யோஷித ஆகியோர் கைது செய்யப்பட்ட போது காட் டப்பட்ட பரபரப்பு நாமல் கைது செய்யப்பட்ட போது நிகழவில்லை. யோஷிதவின் கைதின் போது, கண்ணீர் விட்டுக் கதறிய மஹிந்த 'தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்' என்கிற ரீதியில் முகப்புத்தகப் பதிவு போட் டதோடு தன் துக்கத்தை நிறுத்திக் கொண்டார். அவ்வளவு ஏன், கைதான நாமல் கூட தனது ஆதரவாளர்களின் உதவியுடன் தான் கைது செய்யப்பட்டு நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்படும் காட்சியை தனது முகப்புத்தகத்தில் நேரடியாக ஒளிபரப்பினார். இதன் மூலம் நாமலின் கைது ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்றுதான் என்பது புலனாகியுள்ளது.

### நல்லாட்சியின் நிழல் கைது

உண்மையில் நாமலின் கைது ஒரு எச்சரிக்கை மணி மட்டுமே. இன்னொரு வகையில் சொல்லப் போனால் அதுஒரு 'நிழல் கைது' (அநேகமாக இந்தப் பத்தியை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் கணத் தில் நாமல் பிணையில் வந்திருக்கக் கூடும். இப்போது கைது செய்யப்படும் செய்தி வரமுன்னரே பிணையில் விடுதலையாகும் செய்திகள் வந்து விடுகின்றன.) நல்லாட்சி அரசுக்கு எதிராக இனியும் ஏதும் அரசியல் காய் நகர்த்தல்களில் இறங்கினால், இதை விட அதிக சேதாரத்தை உண்டுபண்ணக் கூடிய குற்றத்தின் கீழ் மஹிந்த குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் கைது செய்யப்படலாம். ஒரு சிலர் இவ்வாறான கைதுகளும், பிணை விடுதலையும் ஒரு பெரும் கைதுக்கான ஒத்திகை என்றும் சொல்கிறார்கள்.

### பிரளயத்துக்கான தயார்ப்படுத்தல்

அதாவது எடுத்த எடுப்பிலேயே பெரும் குற்றமொன்றுக்காக மஹிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கைதானால் மக்களிடையே பெரும் சலசலப்பு ஏற்படும். மஹிந்த ஆதரவாளர்களால் குழப்பநிலை உண்டாகும். ஆனால் இப்படி கட்டம் கட்டமாக கைது செய்து, பிணையில் விடுவதன் மூலம் 'இது வாடிக்கையான ஒரு விடயம்' என்ற மனநிலையை மஹிந்த ஆதரவாளர்களிடம் கூட உண்டாக்கிவிடலாம். அதனால் பெரும் குற்றமொன்றுக்கான கைது இடம்பெற்றாலோ அல்லது பெரிய தலை ஒன்று கைதானாலோ 'வழக்கம் போல மாலையில் பிணையில் வந்துவிடுவார்' என்றுவிட்டு அனைவரும் தத்தம் வேலையைப் பார்க்கப் போய்விடுவர். எனவே இப்போதைய நாடிபிடிப்புக் கைது களும், பிணைகளும் பெரும் பிரளயம் ஒன்றுக்கான அறிகுறிகள் என்று நம்புவோரும் உளர்.

எப்படியிருப்பினும் நிழல் எதிர்க்கட்சி, நிழல் அரசு என்னும் பதங்கள் ஆட்சியாளர்களை விடவும் மஹிந்த அணிக்கே அதிக சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. முன்னர் மஹிந்த பயன்படுத்திய அதே பிரித்தாளும் தந்திரத்தை மைத்திரி-ரணில் கூட்டணியும் பின்பற்றுவதால் மஹிந்த தரப்பு ஆட்டங்கண்டபடியே உள்ளது. நிழல் கைது சலித்துப் போய், கடைசியில் உண்மையான கைது இடம்பெறும் போது, என்னதான் நல்லாட்சி அரசு, மக்களின் மனங்களை ராஜபக்ஷ குடும்பத்தினரின் கைதுக்கு தயார் படுத்தி வைத்திருந்தாலும், ஒரு குழப்பம் நிகழத்தான் போகிறது. அது நிழல் போரா? நிஜப்போரா? நடக்கும் போது பார்க்கத்தானே போகிறோம்.




ஒலிம்பிக் போட்டியில் ஈழத் தமிழன் பெயர் - துளசி தர்மலிங்கம் புலம் பெயர்ந்து வாழும் நாடு ஜேர்மன். போட்டி: குத்துச் சண்டை






புகழ் பெற்ற கால்பந்து வீரர் பீலே 12-07-2016 மீண்டும் திருமணம் செய்துள்ளார். கால்பந்தில் 1281 கோல்கள் அடித்து சாதனை புரிந்துள்ள பீலேக்கு இது மூன்றாவது திருமணம் ஆகும். மெர்சியா அவோக்கியா என்னும் ஜப்பானிய பெண் தொழிலதிபரை ஆறு வருடங்கள் காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார்



ஜூலை 18 - நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாள்


சிற்பக்கலைஞர் செல்லையா சிவப்பிரகாசம் கடந்தவாரம் காலமாகிவிட்டார். யாழ்ப்பாணத்தின் முக்கியமான சிற்பக்கலைஞர். ஓவியக் கலையில் பல மாணவர்களை உருவாக்கியவர். நல்லூரில் உள்ள சங்கிலி மன்னன் சிலை, யாழ்ப்பாணம் மணிக் கூட்டுக்கோபுரத்தைச் சுற்றியுள்ள எல்லாளன், பண்டார வன்னியன் போன்ற சிலைகளை வடிவமைத்தவர்.





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த நிலையில், பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தார். இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்த மட்டக்களப்பு மங்களராமய விஹாராதிபதி வண. அம்பிட்டியே சுமனரத்ன தேரர், தன்னுடைய விஹாரைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்புவிடுத்தார்.

எனினும், குறித்த விகா ரைக்கு வருவதற்கு தனக்கு நேரமில்லை என்று ஜனாதிபதி தேரரிடம் தெரிவித்துவிட்டார். இதனால், ஜனாதிபதி மீது கடும் கோபம் கொண்ட தேரர், தன்னுடைய விஹாரையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயர் பொறிக்கப்பட்டிருந்த நினைவு கல்லை, அடித்து நொறுக்கியுள்ளார்.



## வாரச்சக்கரம்

**மேடம்:** காதலில் வெற்றி. கனவு பலிதம். கள்ளர் பயம். காரியக் கேடு. பயிர் விளைச்சல். பணப் பரிமாற்றம். கடன் கிட்டும்.

**ரிஷபம்:** தூர தேசத்திலிருந்து நற்செய்தி. உற்சாகக் குறைவு. உதவிகள் கிட்டும். போற்றப் படுதல்.பொன் பொருள் விருத்தி. பாலுறவில் நாட்டம். பக்குவக் குறைவு. பகல் கனவு.

**மிதுனம்:** மாந்தர் உதவுவர். மனக் கவலை தீரும். மக்கட்பேறு. மருந்துச் செலவு. முதலீட்டில் ஆர்வம். குடும்ப சுகம். பயிர் பலிதம். வீண்விரயம். அமைதி.

**கடகம் :** கடந்ததை எண்ணிக் கவலை. மனச்சோர்வு. கல்வி விருத்தி. காரிய தாமதம். பிராணிகளால் பயனதிகம். எதிர்ப்பால் சேர்க்கை. எண்ணங்கள் ஈடேறும்.

**சிம்மம்:** பொது நன்மை. ஆன்மிக தரிசனம். வேளாண்மை சிறக்கும். தன, தானிய சிறப்பு. பிணி தீரும். பிதிர்க் கடன். ஆலய தரிசனம். உறவினர் சேர்க்கை.

**கன்னி:** கல்வி மேன்மை. காரியனுகூலம்.தூரதேசப் பணயம். புத்திரரால் நன்மை. இல்லச் சிறப்பு. இரக்க சிந்தனை. ஈகையில் மேன்மை. பயிர் பலிதம்.

**துலாம்:** மனைவி சுகம். மக்கள்பேறு, வியாபார விருத்தி. வரவுக்கேற்ற செலவு. வாய்வுத்தொல்லை. விருந்துபசாரம். ஆலய தரிசனம். யாத்திரையில் நாட்டம்.

**விருச்சிகம்:** தானச் சிறப்பு. பணக்குறை தீரும். பண்பாளர் சேர்க்கை. பகைவர் நண்பராவர்.வாகனச் செலவு. பூமி பலிதம். பகல் கனவு பலிதம்.

**தனுசு:** தனிமை. தவறை எண்ணி வருந்துதல். தன்னிலை மறத்தல். உற்சாகக் குறைவு. உணவில் பிரியம். விருந்தினர் வருகை.கல்வி மேம்பாடு. காரிய சித்தி.

**மகரம்:** பயிர் பலிதம். நெஞ்சில் நிறைவு. உதவியில் நாட்டம். ஊக்கக் குறைவு. பாராட்டு. பணக் கவலை. மனைவியால் மாண்பு. கல்விச் சேவை. பொதுசனக் கலப்பு.

**கும்பம்:** காரியசித்தி. கற்பனையில் [illegible] வீண்செலவு. கல்விக் குறைபாடு. சொத்தால் [illegible]

**மீனம்:** மக்கள் சிறப்பு. வாகனத்தில் கவனம். இறைவழிபாடு அவசியம். ஈகைச் சிறப்பு. கல்வியில் கவனம். முயற்சி பலிதம். விரயத் தேடல்.



கடந்த சில நாட்களாக சமூக வலைத்தள பாவனையாளர்களிடமும் இந்திய ஆங்கில தொலைக்காட்சிகளிலும் மாட்டிக் கொண்டுள்ளவர் ஷாகிர் நாயக். ஷாகிர் நாயக் தெற்காசிய நாடுகள் மத்தியில் இஸ்லாமிய சொற்பொழிவாளராக அறியப்பட்டவர். அண்மையில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் தொடர்புடைய நபர் கொடுத்த வாக்கு மூலத்தில், ஷாகிர் நாயக்கின் பேச்சில் தூண்டப்பட்டே தான் அக்காரியத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறியுள்ளான். இதனால் ஷாகிரின் செயற்பாடுகள் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளன. ஆனாலும் இது ஒரு சதித்திட்டமாக இருக்கலாம் என்னும் கருத்தும் பரவலாக முன்வைக்கப்படுகின்றது.

கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியின் போதை ஒழிப்பு பேரணி.



# கல்வியைத் தரமுயர்த்தப் போராடும்

## கிளிநொச்சி செல்வாநகர் அ.த.க பாடசாலை

வயலும் வயல் சார்ந்த மருத நிலத்திற்கு உரிய அம்சங்களுடன் வடமாகாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத்தில் இருந்து அக்கராயன் செல்லும் வீதியில் உள்ள செல்வா நகர் கிராமத்தின் விடிவெள்ளியாக விளங்குவதே கிளி/செல்வா நகர் அ.த.க.பாடசாலையாகும்.

இக்கிராமம் எமது நாட்டில் நடை பெற்ற கோரயுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வின் ஆதாரமாக விளங்கிய குடியேற்றக் கிராமமாகும். 1987 காலப்பகுதியில் இருந்து மாணவர்கள் பல கிலோமீற்றர் துரத்திலுள்ள கிளி/இந்துக்கல்லூரி, கிளி/கனகபுரம் ம.வி.போன்ற பாடசாலைக்குச் செல்ல வேண்டியிருந்தது. இதனாலும் யுத்தத்தின் அச்சத்தாலும் செல்லமுடியாது அஞ்சி முடங்கியிருந்தனர். அவர்களின் கல்வித் தேவையினைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ஜெயக்கொடி முன்பள்ளியில் ஆரம்பக்கல்வியை அங்கிருந்த யுவதிகள் புகட்டிவந்தனர். தொடர்ந்து இப்பாடசாலையின் தேவையினை உணர்ந்த கல்வித்திணைக்களம் இக்கிராமத்தின் மக்களினதும் பெரியோர்களினதும் வேண்டுகோளை ஏற்று செல்வா நகர் அ.த.க பாடசாலை என்ற பெயரில் ஓர் ஆரம்பப்பாடசாலையாகப் பொறுப்பேற்றுக்கொண்டது. இது இன்று ஆரம்பப்பாடசாலைகளில் ஒரு முன்மாதிரிப் பாடசாலையாக படிப்படியாகப் பரிணாமம் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

இப்பாடசாலையின் ஊட்டப் பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்களை நோக்கும் போது தொடர் யுத்தத்தின் காரணமாகத் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் அவ்வப்போது யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து வாழ்க்கையைத் தொலைத்த மக்கள் தமது அறிவினையும் ஆற்றல்களையும் வளர்க்க முடியாதவர்களாகவும் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு அன்றாடம் கூலிவேலைதேடிப் பெறுவதிலும் தமது குழந்தைகள் ஏனைய சமூகத்துடன் போட்டியிடக்கூடிய அளவுக்கான பொருளாதார வசதியினைப் பெற்றுக்கொள்வதிலும் இன்றுவரை போராட வேண்டியவர்களாகவே காணப்படுகின்றனர். பிரதேச வறுமையால் குடும்பத் தலைவனும் தலைவியும் தொழிலுக்காக செல்ல வேண்டியவர்களாக உள்ளனர். இதன் காரணத்தால் தமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் அதிக நேரத்தைச் செலவிட முடியாதவர்களாகக் காணப்படுவது இப் பாடசாலை சிறந்த வெளியீடுகளை வெளியிடுதலில் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனினும் இம்மக்கள் இருண்டு கிடக்கும் தமது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்தும் ஓர் கலங்கரை விளக்கமாகவும் அறிவாற்றலை வளர்க்கின்ற கலாசாலையாகவும் இப்பாடசாலை திகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் காணப்படுகின்றனர்.




### சாதனைகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். குழந்தைகளின் பாடவிதான செயற்பாடுகளை மட்டுமன்றி கண்காட்சி, விளையாட்டுப்போட்டி முதலான இணைப்பாடவிதானங்களையும் பாடசாலை முன்னெடுப்பது சிறப்பானது. கோட்ட மற்றும் மாவட்ட மட்டங்களில் பிள்ளைகள் வெற்றியீட்டியுள்ளமை அவர்களின் உழைப்புக்கு கிடைத்த வெற்றியாகும்.

பாடசாலையை, அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல, ஐந்து ஆண்டு அமுலாக்கல் திட்டமொன்றை வரைந்து பாடசாலை நிர்வாகம் முன்னெடுத்து வருகின்றது.

இவ் வருடத்தில் இருந்து தரம் -2 வகை பாடசாலையாக இது தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. பெற்றோரின் ஒத்துழைப்பு, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு என்பவற்றுடன் பாடசாலையின் வளர்ச்சிப் பாதை இன்னும் மெருகேற்றப்படுகின்றது.





### சவால்கள்

மாணவர்களின் அன்றாட பொருளாதார பிரச்சினைகள், போக்குவரத்து பிரச்சினைகள், வளப்பற்றாக்குறை என்பன பாடசாலை இன்று எதிர்கொள்ளும் பிரதான சவால்களாக உள்ளன.



சிறுவர் தொடர்

05

- செங்கை ஆழியான் -

# பூதத்தீவுப்புதிர்கள்

சூழன்றடித்த சுழற்காற்று படகினை தென்திசையில் மிக வேகமாக இழுத்துச் சென்றது. எங்கு பார்த்தாலும் பொங்கி வரும் அலைகளும் இருளும் ஆக்கிரமித்திருந்தன. மாணவர்கள் அனைவரும் வீரிட்டலறியபடி தம்மைப் படகுடன் கயிற்றினால் பிணைத்து விட்டு சுருண்டு கிடந்தனர். கடல் மத்தாகக் காற்றினால் குடையப் பட்டது.

பலர் பயத்தினால் மயங்கிவிட்டனர். வசந்தன் எதையும் தாங்கும் மனவலிமையுடன் பயப்படாது அமர்ந்திருந்தான்.

"படகு கவிழ்ந்துவிடுமா?" என்று பயத்துடன் சீலன் அவனைக் கேட்டான். சீலனின் முகத்தில் பயப்பிராந்தி அப்பிக் கிடந்தது.

"பயப்படாதே சீலா, அப்படியொன்றும் நடக்காது" என்று வசந்தன் அவனுக்கு ஆறுதல் கூறினான். ஆறுதல் கூறினாலும் காற்றின் வேகத்திற்கும் அலையின் அலைக்கழிப்பிற்கும் ஈடு கொடுத்தபடி படகு நீரோட்டத்தினால் இழுத்துச் செல்லப்பட்டமையால் ஏற்பட்ட வேகமான இயக்கம் அவன் மனவலிமைக்குச் சவாலாக இருந்தது.

மாலை மறைந்தது. இரவு படர்ந்தது. கால நேரத்தை உணரக்கூடிய சூழ்நிலை அங்கிருக்கவில்லை. நள்ளிரவுக்குப் பின்னர் காற்றின் வேகம் திடீரெனக் குறைந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் மின்னின, நிலவு நடுவானில் கலக்கத்துடன் தொங்கியது. வசந்தன் தன்னைச் சுற்றிப்பார்த்தான். பலர் பயத்துடன் முடங்கிக்கிடந்தனர். சிலரின் மயக்கம் இன்னுமும் தெளியவில்லை. படகின் பயங்கர ஆட்டம் ஓய்ந்து அமைதியான தடாகத்தில் மிதக்கும் அன்னம் போல நகர்ந்தது.

ஆசிரியர் மூர்த்தி தன்னைச் சுதாகரித்துக்கொண்டார்.

"பிள்ளைகள்.. பிள்ளைகள்.." என ஒவ்வொருவராகத்தட்டி உலுக்கி எழுப்பினார். களைப்பும் பசியும் தாகமும் வாட்ட அவர்கள் கண்களைத் திறந்து பயத்துடன் விழித்தனர்.

"நாங்கள் எங்கிருக்கிறோம்?" என வசந்தன் படகோட்டி மாணிக்கத்திடம் கேட்டான். "தெரியவில்லை தம்பி!!" என்றான் மாணிக்கம்: "நல்லவேளை கடவுள் தான் எங்கள் எல்லோரையும் காப்பாற்றினார்"

"ஐயோ! என்னை வீட்டிற்கு கூட்டிப் போங்கோ" மாலா அழுதாள். கடல் நீரை அவள் குடித்திருந்தாள். நாக்கு வறண்டு தவித்தது.

ஆசிரியை கமலம் அவளுக்கு ஆறுதல் கூறினாள்.

"ஒருவரும் பயப்படாமல் இருங்கோ. எவருக்கும் எதுவும் நடக்காது. விடிந்ததும் கரைசேரலாம்" என்றான் வசந்தன் திட்ட வட்டமாக.

அனைவரினதும் ஆடைகள் நனைந்திருந்தன. கொண்டு வந்திருந்த பொருட்களும் கடல் நீரில் தோய்ந்திருந்தன. தண்ணீர்ப்போத்தல்களில் இருந்த நீரை அவர்கள் குடித்தனர். கடல் நீரில் ஊறாதிருந்த பிஸ்கட்டுகளைப் பகிர்ந்து உண்டனர். அவர்களைச் சுற்றி விரிந்த கடலில் மீன்கள் நீர் மட்டத்திற்கு மேலே, தாவிப் பாய்ந்தன. பெரியதொரு சுறாமீன் தன் உடலைத் தூக்கி எழுந்து அமிழ்ந்தது. நிலவொளியில் அவர்களை அது கிலி கொள்ள வைத்தாலும் புதியதொரு அனுபவத்தின் இனிமை வியப்பினைத் தந்தது. அப்படியே அவர்கள் உறங்கிவிட்ட னர்.


அதிகாலை மலர்ந்தது, சூரியனின் கதிர்கள் அவர்கள் மேல் பட்டன. சூரியன் தந்த வெப்பம் அவர்கள் உடல்களுக்கு இதமாகவிருந்தது.

அவர்கள் படகு ஒரு நிலப்பரப்பின் கரையில் தரை தட்டி நின்றிருப்பது அப்பொழுதுதான் அவர்களுக்கு தெரிந்தது. அவர்கள் அனைவரும் கரையை ஆவலோடு பார்த்தனர்.

(புதிர்கள் தொடரும்...)

# நூலகம்



## செல்லங்களே !!

"டக்" கெண்டு உங்களுக்கு ஏதாவது படிக்கோணும், எதாவது தேடோணும், எண்டா என்ன செய்வியள்? உடனே இணையத்தை திறந்து கூகிள்ள தேடுவியள் ஆனா கூகிள்ள இல்லாட்டி அல்லது கூகிள் இல்லாட்டி என்ன செய்வியள்? அதுக்குத்தான் இருக்கு Library எண்டுற நூலகம் .

Library எண்டுற இந்தச் சொல், லத்தீன் மற்றும் கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டது. புத்தக அடுக்கு எனப் பொருள்படும் Bibliotheca என்ற சொல்லே, நூலகத்தைக் குறிக்கப்பயன்பட்டது.

பொது நூலகம், நகரும் நூலகம், மின்னணு நூலகம், தனியாரின் வாடகை நூலகம், பார்வைத்திறன் குறைபாடு உடையவர்களுக்கான நூலகம் என நூலகங்களில் பல்வேறு வகைகள் உள்ளன. இவை தவிர, இன்னொரு வகையும் உள்ளது. அது தான் வீட்டு நூலகம். உங்களுக்கான தனி நூலகத்தை நீங்களே உருவாக்கலாம்.

வீட்டிலே சிறிய நூலகம் ஒன்றை உருவாக்குங்கள். 50 அல்லது 100 புத்தகங்கள் இருந்தாலே போதும். பாடப் புத்தகங்களுக்கு வெளியே படித்தால், மதிப்பெண் கிடைக்காது என்ற எண்ணத்தை மாற்றுங்கள்

நூலகங்கள் நிறைய உள்ளன. குழந்தைகள் அதில் இணைய வேண்டும். சரி செல்லங்கள்! உலகத்திலேயே பெரிய நூலகம் எது எண்டு தெரியுமோ? அமெரிக்காவில் வோஷிங்டென் நகரில் உள்ள கொங்கிரஸ் நூலகம். சரி எவ்வளவு புத்தகங்கள் அங்க இருக்கெண்டு தெரியுமோ ?

மூச்சைப்பிடியுங்கோ

ஏறத்தாழ 3,21,24,001 புத்தகங்கள் !!

# குட்டீஸ் ① பரிசுப்பொதி

**கீழே உள்ள விடுகதைகளுக்கான பதில்கள் இந்த ஓவியத்தில் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து அனுப்பும் ஐந்து குட்டீஸ்களுக்கு கதைப்புத்தகங்கள் அடங்கிய பரிசுப்பொதி காத்திருக்கிறது.**

அனுப்பவேண்டிய முகவரி:

குட்டீஸ் பரிசுப்பொதி - 01

**புதுவிதி, 107, இராசவீதி,**
**கோப்பாய் - திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**முடிவுத்திகதி: 26.07.2016**



01.ஆயிரம் பேர் அணி வகுத்தாலும்
ஆரவாரம் இருக்காது - அவர்கள்யார்?

02.வெள்ளிக் கிண்ணத்தில் தங்கக்காசு!
- அது என்ன?

03 மழையில் விரியும் பூ;
கோடைக்கும் உதவும் பூ- என்ன பூ?

04 சின்னச் சிப்பாய்க்கு
தொப்பியே எதிரி! - அது என்ன?

05.ஒரே வயிற்றில் பிறந்த ஒரு பிள்ளை
ஓடுகிறான்; ஒரு பிள்ளை நடக்கிறான்
- அவர்கள் யார்?



# எலியும் பாலும்

பசி தாங்க முடியாத எலிகள் இரண்டு தாங்கள் ஒளிந்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பானை நிறையப் பால் இருப்பதைக் கண்டன. ஆனால் அது உயரமான பானை. இதனால் பாலைக்குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின.

இதையடுத்து இரு எலிகளும் ஒரு முடிவுக்கு வந்தன. ஓர் எலியின் மீது இன்னோர் எலி ஏறி பாலைக் குடிப்பது. அதன் பிறகு கீழே உள்ள எலிமேல் ஏறி பாலைக் குடிக்கலாம் எனத்திட்டமிட்டு, அதை செயற்படுத்தின.

அதன் படி மேலே உள்ள எலி பாலைக் குடித்த போது, கீழே இருந்த எலி கத்தியது, "போதும்! நான் பால் குடிக்க வேண்டும்..."

கீழே இருந்த எலிபோட்ட சத்தத்தை கேட்டு மிரண்டு மேலே இருந்த எலி, பால் பானைக்குள் விழுந்து விட்டது.

இதைக் கண்ட கீழே இருந்த எலி, "நல்லது, இனி எனக்குத்தான் எல்லாப்பாலும்" என்று நினைத்தது. பிறகு அந்தப் பானையைச் சுற்றி சுற்றி வந்தது. ஆனால் மேலே ஏற முடியவில்லை. கடைசியில் பசியால் அது செத்துப் போய்விட்டது.


**- நீதி -**

**துன்பத்தில் இருந்து விடுதலை அடைய மற்றவர்களின் ஒத்துழைப்புத் தேவை.**




## எங்கட

பல்கலைக்கழக மாணவி சர்மி நிருபாகரனின் "எங்கட" என்ற ஆவணப் படம் வெளியாக உள்ளது, இலங்கையின் வரலாறு தொடர்பில் இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வம் பாராட்டுதலுக்குரியது. இந்த ஆவணம் கந்த ரோடையை மையப்படுத்தியது. கடந்த புதுவிதியில் இதனை மையப்படுத்திய கட்டுரை ஒன்று வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது



## ஹிப் ஹொப் விவசாயி

"உலகத்துலேயே இரண்டே பேர்தான் அவங்க உழைப்பு சுரண்டப்பட்டாலும் மீண்டும் மீண்டும் உழைச்சுக் கிட்டே இருக்காங்க. ஒண்ணு, தேனீ, இன்னொண்ணு விவசாயி. அவங்களுக்கு உணவு இல்லாத போதும் நமக்கு உணவு அளிப்பார்கள். அவங்கஃபேஸ்புக், ட்விட்டர்ல எல்லாம் கிடையாது. அவங்களுக்கு யாராவது குரல்கொடுக்கணும். அதான் இந்தப்பாட்டு" என்கிறார் ஹிப் ஹொப் தமிழா ஆதி. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக வெளிவந்த இவருடைய பாடல் ஜல்லிக் கட்டை எதிர்த்த அமைப்புக்களை சூடாக்கி இருக்க தான் விவசாயிகளின் பக்கம் நிற்கின் றேன் என்று மீசையை முறுக்குகின்றார் ஆதி.

## புதுமை ந

நடிகை சார்மி அனைவரையு
வகையில் ஒரு செயல்செய்துள்ளா
ளமான தலைமுடியை வெட்டி ஆ
களைச் செய்து புற்றுநோயால் பா
பெண்களுக்கு தானம் செய்துள்ள



### தேவி - நயன்தாராவா?

பிரபுதேவா தயாரிப்பில் தமன்னாவுடன் இணைந்து நடித்துள்ள படம் தேவி. பிரவுதேவாவின் முன்னாள் காதலி நயந்தாராவின் சொந்த கதை தான் இது என தகவல்கள் கசிகின்றன. ஆனால் படம் உண்மையில் பேய்க் கதையாம். நடிகை மற்றும் அக்கா என தமன்னாவுக்கு இரு வேடமாம். இப்படத் தில் ஓடியோ ஓகஸ்ட் மாதம் விஜயவாடாவில் ஸ்ரீதேவியால் வெளியிடப்பட்டுள்ளது.



## காற்று வெளியிடை

### ஒத்திகையில் ஜோ


36 வயதினிலே மூலம் 2 ஆம் இன்னிங்ஸை தொடங்கிய ஜோ குற்றம் கடிதல் படத்தை இயக்கிய பிரம்மா இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதற்காக 20 நாட்கள் ஒத்திகை ஆரம்பித்துள்ளது. இதில் ஜோதிகாவும் கலந்து கொண்டுள்ளார்.

மணிரத்னம் இயக்கத்தில் கார்த்தி ஹீரோவாக நடிக்கும் படத்திற்கு "காற்று வெளியிடை" என பெயரிடப்பட்டுள்ளது. கார்த்திக்கு ஜோடியாக அதிதிராவ் நடிக்கும் இப்படத்தின் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. கார்த்தி விமானியாக நடிக்கும் இப்படத்தை மணிரத்னம் முழுவதும் காதல் பின்னணியில் இயக்குவதற்கு முடிவு செய்துள்ளாராம்.



## கனவுக் கன்னி

இளைஞர்களின் கனவுகளை புதிதாக ஆக்கிரமிக்க ஆரம்பித்திருக்கிறார் கீர்த்தி சுரேஷ். ரஜினியுடன் 'நெற்றிக்கண்' படத்தில் "ராமனின் மோகனம்..." பாடல் பாடிய கதாநாயகி மேனகாவின் மகள். 'இது என்ன மாயம்', 'ரஜினி முருகன்' என்று இரண்டே படங்களில் உச்சத்துக்குப் போய்விட்டார். இப்போது விஜயுடன் "தளபதி-60" படத்தில் நடித்து வரும் கீர்த்திக்கு, விஜய் படம் ரிலீஸான பிறகு சம்பளத்தை உயர்த்தும் திட்டம் இருப்பதால் புதுப் படங்களை ஒப்புக் கொள்ளவில்லை. சினிமாக் கனவு என்ன என்று கேட்டால், "எங்கம்மா ரஜினிசாரோடு டூயட் பாடின மாதிரி நானும் அவரோடு ஒரு படத்துல பாடி ஆடணும்" என்று சொல்லிக் கண்சிமிட்டுகிறார்.




## கானிபாலிசம்

ஈழத்து கலைஞர்களின் முயற்சியில் உருவாகிவரும் புதிய குறும்படம் கானிபாலிசம். நிலானின் இயக்கத் தில் சுதர்சனின் இசையில் இப்படம் உருவாகின்றது. தன் இனத்தை தானே உண்ணுவதை தமிழில் கானிபாலிசம் என்று குறிப்பிடுவர்.

# நாயகி

னவரையும் நெகிழ வைக்கும்
ய்துள்ளார். அதாவது அவரது நீ
வட்டி அதில் இரண்டு 'விக்கு'
யால் பாதிக்கப்பட்ட இரண்டு
சய்துள்ளார்.

# தல 57



■ தல 57 படத்தின் முதல்நாள் படப்பிடிப்பு பல்கேரியாவில் இடம்பெறவுள்ளதாகவும் பெரும்பாலான காட்சிகள் ஐரோப்பிய நாடுகளில் நடைபெறவும் திட்டமிடப்பட்டுள்ள தாம். மேலும் இதில் தல அஜித் உளத்துறை (FBI) அதிகாரியாக நடிக்கிறாராம். கதாநாயகியாக அனுஷ்கா நடிப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். அதற்கான முறையான அறிவிப்பு இன்னும் சில நாட்களில் வெளிவருமாம்.



# கைநழுவிய விருது

■ கேரளாவில் சக்கைபோடு போட்ட 'பிரேமம்' படத்தில் நடித்தவர் மடோனாசெபாஸ்டியன். தமிழில், "காதலும் கடந்துபோகும்" படத்தில் விஜய் சேதுபதியுடன் நடித்தார். "எனக்கு 'பிரேமம்' படத்துக்கு விருது கிடைக்கவேணும்" என்று வேளாங்கண்ணி மாதாவை வேண்டிக்கொண்டிருந்த மடோனா செபாஸ்டியனுக்கு ஏனோ விருது கிடைக்கவில்லை.



# தடாலடி நிக்கிகல்யாணி

■ "வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன்" படத்தில் தடாலடிப் பெண்ணாக நடித்துமிரட்டிய நிக்கிகல்ராணி, நிஜத்தில் பரம சாதுவாம். "டார்லிங்", "கோ-2" படங்களில் ஜி.வி.பிரகாஷ், பாபிசிம்ஹா போன்ற ஹீரோக்களுடன் நடித்த நிக்கிகல்ராணி, "சம்பளம் குறைச்சுக் கொடுத்தாலும் பரவாயில்லை. முன்னணி ஹீரோக்களுடன் நடித்தே தீருவேன்" என்று அடம்பிடிக்கிறார். அதற்கு தூதுவிடும் படலம் தொடர்கிறது.

# சங்கமித்ராவில் ரஹ்மான்




■ ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸின் 100 ஆவது படமான சங்கமித்ராவுக்கு ஏ.ஆர். .ரஹ்மான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பது உறுதியாகியுள்ளது. ரஹ்மான் தனது சமூக வலைத்தளத்தில் இப்படத்திற்கு இசையமைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன் என்றும், இந்தபடத்தை இயக்கும் சுந்தர்.சி குழுவினருக்கு வாழ்த்துக்கள் என்றும் தெரிவித்துள்ளார்.



■ நிஜமான குத்துச்சண்டை வீராங்கனை ரித்திகாசிங், "இறுதிச்சுற்று" படத்தில் மீனவப் பெண்ணாக நடித்து அசத்தினார். அடுத்து, நேரடித் தமிழ்ப் படங்கள் கிடுகிடுவென குவிய ஆரம்பித்துவிட்டன. "ஆண்டவன் கட்டளை" படத்தில் நடித்துவரும் ரித்திகா சிங்குக்கு படத்தின் ஹீரோ விஜய் சேதுபதி தான் தமிழ் வாத்தியார்.

# தமிழ் கற்கும் ரித்திகா

# சைபர் மீன்கள்



# சுவரில் கொய்தவை

**Thanigaivasan Sundaralingam**
1 hr

வீட்டுல சாப்பிடுறப்போ தான் கிழமைல வெள்ளி ஒன்னு இருக்குனு ஞாபகம் வருது.. #மரக்கறி

**Vikey Wignesh**
Yesterday at 07:49 · Twitter

"என்னோட விருப்பப்படியே வாழ்வேன்" என்று சொல்லும் பெரும்பாலானோரின் தெரிவுகள் இன்னொருவர் விருப்பத்தின்படியே அமைந்து விடுகின்றன...

**Rimzan Amanullah**
Yesterday at 10:54 · Twitter

Block என்பதில் lock இருக்கிறது. அன்புளொக் என்பதில்தான் 'அன்பு' இருக்கிறது. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

**Winson Gnanatheepan**
17 hrs

இப்ப டயலோக்ல யாழ்ப்பாண பஸ் டிக்கட்டும் புக் பண்ணலாமாம்...ஏமாத்துற எண்டு முடிவு பண்ணீட்டீங்க...நடத்துங்க எசமான் நடத்துங்க

**Krishnie Manipalan**
4 July at 13:55

இந்த நாள் இப்படியே நீளக்கூடாதா என்பதை விட எப்போது முடியும் என்பதே அநேகமானவர்களின் எதிர்ப்பார்ப்பாகவுள்ளது.

**Nivethitha Sivasothy**
2 July at 22:55

எக்சாம் நேரத்துல இன்ரஸ்ட்டா இருக்குர பேஸ்புக் எக்சாம் முடிஞ்ச அடுத்தநாளே போறடிச்சுடுது... என்ன வாழ்க்கடா இது

**B Niru Sob**

அன்று காதலியின் பெயரை
பச்சைக்குத்திய என் நெஞ்சை
இன்று தடவி பார்த்து மகள் கேட்கிறாள்..
என் மீது அவ்வளவு பாசமா அப்பா என்று ?
From #daklas timeline

**Thamizh Kumaran** feeling crazy.
5 July at 21:26

பாஸ், Apple ஐபோனுக்கும் சாம்சங் Android போனுக்கும் அப்படி என்ன பெரிய வித்தியாசம்?

ரெண்டு வருசத்துக்கு ஒரு போன் ரிலீஸ் பண்ணினா அது அப்பிள், அதுவே ரெண்டு வாரத்துக்குள்ள நாப்பது போன் ரிலீஸானால் அது சாம்சங்கு பாஸ்



09.07.2016
முதல் 24 மணி நேர
தபால்சேவை
வண்ணார்பண்ணை
சிவன்கோயிலுக்கு முன்...




## சிந்திக்க வைக்கும் கதைகள்

1. ஒரு கிராமத்தில் மழை வேண்டி கிராம மக்கள் எல்லாம் சேர்ந்து இறைவனை வேண்டினார்கள். அதில் ஒருவன் மட்டும் குடையோடு வந்தான்..
"இதற்கு பெயர்தான். உண்மையான பக்தி!"
2. குழந்தையை மேலே தூக்கி போட்டு விளையாடினார். ஒரு தந்தை. பயப்படாமல் சிரித்தது குழந்தை.
"இதற்குப் பெயர்தான் பாசம்"
3. ஒவ்வோர் நாள் இரவும் அலாரம் வைத்து விட்டு படுக்கபோகிறோம். நாம் நாளை உயிரோடிருப்போம் என்பதற்கு எந்த வித உத்தரவாதமும் இல்லாமல்.
"இதற்குப் பெயர்தான் நம்பிக்கை!"
4. நடப்பது எதுவும் நம் கையில் இல்லை எனத் தெரிந்தும், எதிர்கால திட்டம் போடுகிறோம்.
"இதற்குப் பெயர்தான் தன்னம்பிக்கை!"
5. உலகமே கஷ்டப்படுவதை நாம் தினமும் பார்த்தாலும், அதுபோல் நமக்கும் கஷ்டம் வரும் எனத் தெரிந்த போதும், நாம் திருமணம் செய்து கொள்கிறோம்..!!!!??????
"இதற்குப் பெயர்தான் அதீத தன்னம்பிக்கை!"

**Arunmoli Mayuran**




படித்து சிரித்தது...

பாராளுமன்றத்தின் முன்புறம் ஒரு சிறுவன் சைக்கிளை நிறுத்தி விட்டு, பக்கத்தில் எங்கோ நடந்து செல்வதை பார்த்து, அருகில் நின்ற போலீஸ்காரர் அழைத்தார்.
" தம்பி...இந்த ரோடு எதுன்னு தெரியாதா ? நீ பாட்டுக்கு சைக்கிளை நிறுத்தி விட்டு செல்கிறாய் ? இந்த வழியே எம்பிக்கள்,சமயங்களில் முதலமைச்சர்கள், கேபினெட் அமைச்சர்கள்,ஏன்...குடியரசு தலைவர்,அரசியல் தலைவர்கள் எல்லோரும் இந்த வழியாகத்தான் போவார்கள்.."


சிறுவன் இயல்பாக சொன்னான் : " பயப்பட வேண்டாம் சார்...நான் சைக்கிளை லாக் பண்ணிட்டுத்தான் போறேன்.."

## மீ யதார்த்தவாதம்
(Hyperrealism)



இக் காண்பியக்கலை உருவாக்கம் இப்போது உலகெங்கும் பிரசித்தமாகியுள்ளது. 1970 களில் இக்கலை வடிவம் உருவாகியுள்ளது. உருவாக்கும் கலைப்படைப்பின் உருவத்தின் இழைமங்களை, நிறங்களை, ஒளியை, உணர்வுகளை, மிக தத்ரூப மாக உருவாக்கும் கலை வெளிப்பாடுகளை மீ யதார்த்தவாதம் என்கின்றனர். ஓவியம், சிற்பம் போன்ற கலைத்துறைகளில் இன்று மீ யதார்த்தவாத படைப்புகள் அதிகமாக உருவாகின்றன.

இங்கே நீங்கள் பார்க்கும் படங்கள் கைகளால் வரையப்பட்டவைஎன்பதைநம்பமுடிகின்றதா? அதுதான் மீ யதார்த்தவாதம்.



## இந்தவார மீம்ஸ் (Meme)

**Senthur Tamil**
8 hrs






**இணையவாசிகளுக்கு**
உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள்.
சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும்.
https://www.facebook.com/puthuvithieditorial/

# நிலவு பொழிவது ஹந்தானையிலா?

லறீனா அப்துல் ஹக்

(சென்றவாரத் தொடர்ச்சி...)



இக் கேள்விகளை ஒன்றிணைத்து லியனகே அமரகீர்த்தி வேறு ஒரு கேள்வியை எழுப்புகிறார். "நீ கெம்பஸுக்குப் போ. அங்கேயுள்ள எல்லா நல்ல விடயங்களையும் கற்றுத்தேர். எனக்குக் கெம்பஸ் போகக் கிடைக்கவில்லைதான். எனினும், கெம்பஸ் போவதென்பது வாழ்வின் ஒரே ஒரு விடயம் மட்டுமே. அதனால், நான் தச்சு வேலையைக் கற்று ஒரு கைதேர்ந்த தச்சனாகிறேன். எங்கள் வீட்டுக்குத் தேவையான தளபாடங்களை எல்லாம் நானே செய்வேன். நீ கெம்பஸ் படிப்பை முடித்துவிட்டு வந்த பின் நாம் கலியாணம் கட்டுவோம் என்று ஏன் அந்த இளைஞனால் சொல்ல முடியாமல் போனது?" இதுவே அந்தக் கேள்வி.

மேற்கண்டவாறு பேசிய பல காதலர்கள் சமூகத்தில் இருந்திருக்கக்கூடும். என்றாலும் அது ஒரு சாதாரண/இயல்பான ஒன்றல்ல என்பதை லியனகே அமரகீர்த்தி சுட்டிக்காட்டுகின்றார். அக்காதலர்களோ அவர்களின் பெற்றோரோ, ஒன்றிணைந்து அந்தத் தொடர்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுவதையே பெரும்பாலும் காண நேர்கின்றது என்கிறார், அவர். அது ஏன்? என்று கேள்வியொன்றை எழுப்பும் அவர், அதற்கான காரணத்தையும் முன்வைக்கின்றார். ஆம், பட்டப்படிப்பை மேற்கொண்டோர் - மேற்கொள்ளாதோருக்கு இடையில் சமூக இடைவெளியொன்று நிலவிவருவதும், அந்த இடைவெளி தவிர்க்க முடியாத சமூக யதார்த்தம் என்று இயல்பாக ஏற்றுக்கொண்டுவிடும் சமூக மன நிலையுமே இதற்கான காரணங்களாகும் என அவர் வலியுறுத்துகின்றார்.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மேற்படி சூழமைவு கொண்ட ஓர் இளம் பெண் "மூக்கும் முழியுமாக" இருக்கும் பட்சத்தில், அவளின் பால் ஈர்க்கப்படும், மற்றொரு பட்டதாரி மாணவன் சொல்லக் கூடிய கருத்தும், "அவள், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகாத அவளது காதலனைவிட பட்டதாரியாகக் கற்கும் தனக்கே அதிகப் பொருத்தமுடையவள்" என்பதாகத்தான் இருக்கும் என்பதையும், மேற்படி பாடலைப்பாடும் காதலனும் அவ்வாறானவர்களை அவள் பல்கலைக் கழகத்தில் எதிர்கொள்ள நேரும் என்பதை நன்கறிந்ததன் விளைவாகவே அவ்விதம் பாடியிருக்கவும் கூடும் என்றும் அமர கீர்த்தி சுட்டிக்காட்டுகின்றார்.

அடுத்து, இப்பாடல் சொல்லும் கருத்தினை சற்று உள்ளார்ந்து நோக்கியுள்ள லியனகே அமரகீர்த்தி, இப்பாடல் வரிகள், அப்பாடல் கூறும் சமூகநிலையினை எத்தகைய கேள்விக்கும் அப்பால் அப்படியே ஏற்றுக்கொள்ளும் வகையிலான தொனியிலேயே அமைந்துள்ளது என்பதைத் தெளிவுறுத்துகிறார். அந்த வகையில், ஒரு பட்டதாரிப்பெண் - ஒரு பட்டதாரியாகாத ஆண் ஆகிய இருவருக்கும் இடையிலான காதல் அல்லது திருமண வாழ்வு பொருத்தமற்றது என்ற எண்ணம் சமூக ஆழ்மனதில் பதிந்திருப்பதால், அரச உத்தியோகம் பார்க்கும் ஒரு பட்டதாரிப் பெண்ணுக்கும் தச்சுத்தொழில் செய்யும் ஓர் இளைஞனுக்கும் இடையிலான காதல் என்பது "இயல்பான" அல்லது "ஏற்கத்தக்க" ஒன்றல்ல என்றாகிவிடும். அப்படியானால், நாம் இந் நாட்டில் உயிரைக் கொடுத்துப் பாதுகாக்கப்போராடும் இலவசக்கல்வி முறைமையானது சமூக இடைவெளியொன்றையே உருவாக்கி வைத்துள்ளது என்பதே இதன் பின்னாலுள்ள யதார்த்தமாகும் என அமரகீர்த்தி மேலும் சுட்டிக் காட்டுகின்றார். சிலவேளை, ஒப்பீட்டளவில் மிகச் சிறந்த கலைப் படைப்புகளின் பின்புலத்தில் கூட அழகலங்காரக் கோஷங்களுக்குள் அழகற்ற, சமூகத்துக்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய அபாயகரமான கருத்தாக்கங்கள் ஒளிந்திருக்கக் கூடும் என்பதைச் சொல்லி அவர் தனது கட்டுரையை நிறைவு செய்துள்ளார்.

கலாநிதி லியனகே அமரகீர்த்தியின் கட்டுரையில் முன்வைக்கப்பட்ட இச்சாராம்சக் கருத்துக்களை வாசித்தபோது அக்கருத்துக்களுடன் தொடர்புடைய சில எண்ணங்கள் எழத் தவறவில்லை. ஒரு சமூகத்தைச் சிறந்த ஒன்றாகக் கட்டியெழுப்பி மேம்படுத்தும் வலுவான காரணிகளுள் பிரதானமானதாகத் திகழும் கல்வியானது, இன்று சமூகத்தை ஏற்றத்தாழ்வுடையதாகக் கூறுபடுத்தும் வகையில் கட்டமைந்துள்ளமை துரதிஷ்டவசமானது. புத்தகக் கல்வியைப் போலவே தொழிற்கல்வியும் சமதரத்தில் வைத்து நோக்கப்படும் நிலைமை உருவாக வேண்டியதன் அவசியம் ஒரு புறம்.

அதேவேளை, இளம் தலைமுறையினர் அனைவருக்கும் உயர் கல்வி கிடைக்க வேண்டிய தேவை வலியுறுத்தப்பட வேண்டிய காலக் கட்டாயம் கருத்திற் கொள்ளப்பட வேண்டி இருக்கின்றமையும் இங்கு நோக்கத்தக்கது. "நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் எந்தவிதமான பாரபட்சமும் இன்றி, தரமானதும் சமத்துவமானதுமான உயர்கல்வி வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அப்படியான உயர் கல்வியைப் பெற்றுப் பயனடைவது மாணவர்களின் உரிமை" என்ற கோஷத்துடன் சிலி நாட்டில் கமிலா வொலேஜோவின் தலைமையில் களத்தில் இறங்கிப் போராடிய மாணவர் அணியின் முயற்சி இங்கு நினைவு கூறப்பட வேண்டியது..


அடுத்ததாக, அவர் முத்தாய்ப்பாய் முன்வைத்துள்ள மற்றொரு கருத்து ஆழ்ந்த கவனத்துக்கு உரியது. ஒரு படைப்பின் வெளித்தோற்றமும் உள்ளரசியலும் பற்றியது. ஒரு குறித்த சமூகத்தின் மீது அல்லது சமயத்தவர் மீது வெறுப்பையும் காழ்ப்புணர்வையும் விதைக்கும் வகையிலான படைப்புகளையும் பிறரை அடக்கியொடுக்குவதனை ஆதரித்துச் சரி காண்பதான படைப்புகளையும் கூட நாம் இந்த வகைமைக்குள் உள்ளடக்கி நோக்கலாம். இஸ்லாமியர்மீதோ கருப்பினத்தவர் அல்லது இடம் பெயர்ந்தோர் / தம்மைச் சாராதோர் மீதோ வெறுப்பை விதைக்கும், அவர்களைக் காட்டுமிராண்டிகளாகச் சித்திரிக்கும் ஹொலிவுட், பொலிவுட் / கொலிவுட் திரைப்படங்கள், பெண்ணடிமைத்தனத்தை வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல் இயல்பான சமூக யதார்த்தமாகக் கட்டமைக்க முனையும் சினிமா / தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் அதையொத்த புனைகதைகளையும் கூட இதற்கான நல்ல உதாரணங்கள் எனலாம்.

ஆக, ஒரு படைப்பினை உள்வாங்கும் போது அதன் உட்சரடாகத் திகழும் அரசியலையும் உள்ளார்ந்து நோக்குதல் இன்றியமையாததாகும் என்பது தெளிவு.

---

குறுங்கதை

## கேள்வி



போர்க்காலம்,
கடுமையான ஏறிகணைத்தாக்குதலால் அந்தக்கிராமம்
அதிர்ந்தது, மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு ஊரைவிட்டு
இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர்.
எங்கும் ஒரே அவலச்சத்தம்
ஒரு தாய் தன் சின்ன மகனை மார்போடணைத்து தூக்கியபடி
ஓடிக்கொண்டிருந்தாள்.
சிறுவன் கேட்டான் ஏன் எல்லோரும் ஓடுறம் ?
"ஷெல் அடிக்கிறாங்கள் அதுதான்" - இது அம்மா
"ஏன்? ஷெல் அடிக்கிறாங்கள்" - மீண்டும் மகன்
"நாங்கள் தமிழர்கள் அதுதான்" - இது அம்மா
சிறிது மௌனம்
சற்றுத்தூரத்தில் ஒரு மரம் ஷெல் வீச்சில்
சின்னாபின்னப்பட்டு அதில் கூடுகட்டியிருந்த பறவைகள்
செத்துக்கிடந்தன.
"ஏனம்மா காகங்கள் செத்துக்கிடக்குது?" என்றான் மகன்.
"ஷெல் பட்டு செத்துப்போச்சு" -அம்மா சொன்னாள்
மகன் திரும்பக்கேட்டான்
"அப்படியெண்டால் இதெல்லாம் தமிழ்க்காகங்களா?"

ராதேயன்

---




## நூல் அறிமுக விழா

கிளிநொச்சி இலக்கிய நண்பர்களின் ஏற்பாட்டில் வேதநாயகம் தபேந்திரனி யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 3 நூலின் அறிமுகவிழா 03.07.2016 ஞாயிற்று கிழமை பிற்பகல் 3 மணி 07 நிமிடத்திற்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் அமரசிங்கம் கேதீஸ்வரனி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையை கிளி.ஊற்றுப்புலம் அ.த.கபாடசாலை அதிபர் உமாசங்கர் மகேசன் நிகழ்த்தினார்.

வாழ்த்துரைகளை கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை இறைபிள்ளை, கிளிநொச்சி கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. பிறேமா மதுரநாயகம் ஆகியோரும் நூல் அறிமுக உரையை உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி உதவியாளர் திருமதி.மணிமேகலையும் நிகழ்த்தினார்கள்.

நூலின் முதல் பிரதியை கிருபா லேணர்ஸ் முதல்வர் அ.கிருபாகரன் பெற்ற நூல் நயப்புரையை கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் வண.ரி.எஸ்.ஜோசுவா நிகழ்த்த ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்தினார்..

சிறுகதை



# பூக்கள்

இராஜேஸ்கண்ணன்

"சிந்துஜன் வாங்கோ மற்றப் பிள்ளைகளையும் கூட்டி வாங்கோ. நாங்கள் அதிரதன்ரை ரோஜாவுக்குத் தண்ணி வார்ப்பம். அதிலை வாற பூவை இனி ஒருதரும் பிடுங்கக்கூடாது. சரஸ்வதி பூசையிலை கடவுளுக்கு வைக்கமட்டும் பிடுங்கலாம் என்னப்பன் அதி"

அவனுள் பொங்கிக் கொண்டிருந்த கோபம் இப்போது கண்களின் மடைதிறந்து கண்ணீராய்க் கொட்டியது. அவ னது அழுகையை நிறுத்திவிட வழி தெரியாது தடுமாறி நிற்கின்றேன்.

அவனிடத்தில் பொங்கிய கோபத்தி னால் அடிவாங்கிய மாணவன் அவனி டம் மன்னிப்புக் கேட்டு, அவனது அழு கையை ஆற்றமுனைந்தும் தோற்றுப் போகின்றான்.

"அதி இந்தா உன்ரை ரோஜாப் பூ. நான் ஆசையிலை பிடுங்கிப் போட்டன். இனி ஒரு நாளும் பிடுங்கமாட்டன். அழாதையடா அழாதை" அந்த மாண வன் அவன் முன்னிலையில் தான் பறித்த ரோஜாப் பூவை நீட்டிக் கொண்டு நிற்கின்றான்.

இவனுடைய முகத்தில் திடீரென ஒரு மாற்றம். அவன் நீட்டிய ரோஜாப் பூவை வாஞ்சையோடு வாங்கித் தனது சட்டைப் பையினுள் வைத்துக் கொள் கின்றான்.

என்னுள் ஆயிரம் வினாக்கள்.

அதிரதனுக்கு வகுப்பாசிரியர் நான் தான். அவனை ஆரம்பநிலை வகுப்புகளிலிருந்து அறிந்தவன். நான் அறிந்த வரை இவ்வளவு காலத்தில் ஒருபோதும் இப்படி அவன் நடந்து கொண்டதில்லை. கடந்த சில காலமாக அவனிடத்தில் உறைந்திருந்த பெரிய மனுச அமைதி அவனது வயதின் மாற் றத்தினால் வந்துவிட்ட ஒன்று என்று எண்ணியிருந்தேன்.

இப்போது என்னுள் ஒருவித ஆராய்வூக்கம். அவனிடத்தில் கடந்த மூன்று மாத காலமாகக் கவிந்திருந்த தனிமையின் இரகசியத்தை ஆராய்வது எனது முதன்மைக் கடமையாக உணர் கிறேன்.

ஒவ்வொரு பிள்ளையின் பின்னாலும் ஒரு கதை இருக்கத்தான் செய்கின்றது. வாழ்வின் கனதியைச் சுமக்க முடியாத வயதில் சுமந்தவர்கள் அவர்கள்.

வாழ்வு நந்திக்கடலில் கொட்டப்



பட்ட போது, அவன் மூன்றாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்தான். வேரோடு பிடுங்கப்பட்ட வாழ்வில் உதிர்ந்து விடாத துளிர்களின் பிரதிநிதி அவன். சில சமயங்களில் உதிர்ந்துவிட்ட துளிர் களின் பிரதிநிதியும் அவன்தான்.

அதிரதனுக்கு இப்போது பத்து வயது. ஏழு வயதில் அவனைப் பாடசா லையில் கண்டபின்னர் இப்போது தான் பார்க்கிறேன். அப்போது அவ னிடம் இருந்த துருதுருவென்ற கண்கள் எப்போதும் ஏதோ ஒன்றைச் செய்ய நினைக்கும் பரபரப்பு தனது தோழர்களுடனும் ஆசிரியர்களுடனும் கொண்ட சினேகப் பிணைப்பு எல்லாம் இப்போது தொலைந்திருந்தன.

உருக்குலைக்கப்பட்ட உலோகக் குவியல்களின் நடுவே தேடப்படும் வாழ்வு காட்சிப் பொருளாக்கப்பட்ட தருணத்தில் தான் எங்கள் பாடசாலை யும் மெல்ல மெல்ல உயிர்ப்பு பெறத் தொடங்கியது.

மாணவர்கள் மீளப் பாடசாலைக்கு வந்த போது ஒவ்வொருவரும் ஒவ் வொரு பூச்செடி கொண்டு வந்து நாட்டி வளர்க்க வேண்டும் என்ற கட்டளை யைப் பிறப்பித்திருந்தது நான்தான்.

மீளக்குடியேறி வந்த சில நாட்களில் இந்தப் பிரதேசம் மனிதர்களின் முகங் களைத் தேடின. தொலைந்த முகங்கள் ஒன்றும் வியப்பானவையல்ல. இருந்த முகங்கள் தான் இன்னும் வியப்பான வை.

கிரிதரன் அதிரதனின் பாலர் வகுப்பு நண்பன். சுட்டித் தனத்துக்குக் குறைவில் லாதவன். பாலர் விளையாட்டுகளில் விண்ணன். எப்போதும் அதிரதனுடன் கைகோர்த்தபடி நடப்பான்.

அப்போது தான் அதிரதனுடைய பெற்றோரைக் கண்டேன்.

"சேர் நாங்கள் அதிரதன்ரை அம்மா அப்பா. அவன் பள்ளிக்கூடம் வரமாட் டான் எண்டு முரண்டு பிடிக்கிறான். என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. காரணம் கேட்டாலும் சொல்லுறா னில்லை. தனியத்தனிய இருந்து யோசி க்கிறான். முதல் ஒரு ஏழெட்டு நாள் வந்தவன். பிறகு மாட்டன் எண்டு சொல்லுறான். நீங்கள் ஒருக்கால் கவனிப்பியள் எண்டுதான் உங்களிட் டைச் சொல்லுறம். பாத்துக்கொள்ளுங் கோவன்" அவர்கள் சொன்ன வார்த் தைகள் இன்னும் என் காதுகளில் கலந் திருந்தன.

நான் அறிந்தவரை இன்றுதான் அதிர தன் அழுததைப் பார்த்திருக்கிறேன். அதுவும் ஒரு கர்ணகடூர கோபத்துடன்.

எப்போதும் எல்லா ஆசிரியர்களா லும் "பண்பான பிள்ளை" என்று பேரெடுத்த அதிரதனா இப்படி நடந்து கொள்கின்றான்?

விசாரணை செய்யத் தூண்டியது பொதுப்புத்தி. இல்லை என மறுத்தது என் இதயமா? அன்றி மூளையா? புரிய வில்லை.

அதிரதனை தனித்து அழைத்துச் செல்கின்றேன். என்னால் காட்டக் கூடிய அளவுக்கு பரிவு காட்டி அவனு டன் பேசுகின்றேன். இந்தத் தருணத் தைவிட்டு விட்டால் அந்தச் சிறுவ னின் மனதடியில் பொதிந்துள்ள விடயங்களைக் கேட்டறிய முடியாது போய் விடும் என்பதை உணர்ந்து பவ்வியமாகப் பேசுகின்றேன்.

"அப்பன் அதி, நீங்கள் கெட்டிக் காரப்பிள்ளை. பள்ளிக் கூடத்திலை எல்லாருக்கும் உங்களை நல்லாப் பிடிக்கும். நல்ல மாக்ஸ்" எடுக்கிற னீங்கள். பேச்சு, பாட்டு, கவிதை எல் லாம் நல்லாச் செய்யிறனீங்கள். இந்த சரஸ்வதி பூசையிலும் உங்களை ஒரு பாட்டுப்பாட வைக்க நான் விரும்புறன். நீங்கள் ஒருநாளும் ஒருத்தரோடையும் சண்டை பிடிச்சதை, ஏசினதை நான் காணேல்லை. ஏனப்பன் சிந்துஜனுக்கு அடிச்சனீங்கள் அவன் உங்களுக்கு ஏதும் செய்தவனோ?"

இவ்வளவு வார்த்தைகளின் பின்னும் அவன் மௌனியாகவே இருந்தான்.

"அதிரதன் உங்களுக்கு சிந்துஜன் அடிச்சிருந்தால் சொல்லுங்கோஅவனை அதிபரிட்டை அனுப்பி அப்பா அம்மா வுக்குச் சொல்லியனுப்புவம்"

என் வார்த்தைகள் முடிய முன்பே "இல்லை சேர் அவன் அடிக்கேல்லை. அவன் பாவம். நான்தான் அவனுக்கு அடிச்சுப்போட்டன்". கலக்கத்துடன் வந்து விழுந்தன வார்த்தைகள்.

"நீங்கள் ஒருத்தருக்கும் அடிக்கிற தில்லை. எல்லாரோடையும் நட்பா இருப்பியள். பின்னை ஏன் சிந்துஜ னுக்கு?.... அவன் உங்கடை ஃபிரண்ட் இல்லையா?"

"சேர் அவன் என்ரை ஃபிரண்ட் தான் ஆனாலும்"

"என்னப்பு என்ன செய்தவன் சொல் லுங்கோ. அவன் குற்றம் செய்தால் நிச்சயம் நானே அவனை தண்டிக்கிறன். சொல்லுங்கோ?"

"சேர் பாவம் சிந்துஜன். அவனுக்குத் தெரியாது அது என்ரை கிரியன் எண்டு. பாவம் சேர் சிந்துஜன். அவனும் என்ரை கிரியன் போலத்தானே"

ஓவென்று கதறி அழத் தொடங்கி னான் அதிரதன்.

"அதி அழாதையுங்கோ அப்பன். சேர் ஆரையும் தண்டிக்கமாட்டன். அழாதை யுங்கோ"


அதிரதனின் அழுகை ஓய்ந்துவரும் அந்த நிமிடங்களில் என் மனக் கண் ணில் "கிரியன்".

கிரிதரன் அதிரதனின் பாலர் வகுப்பு நண்பன். சுட்டித் தனத்துக்குக் குறைவில் லாதவன். பாலர் விளையாட்டுகளில் விண்ணன். எப்போதும் அதிரதனுடன் கைகோர்த்தபடி நடப்பான்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# விடிவில்லையா விவசாயிகளுக்கு?

வர்ஷி
- நேர்காணல்கள் - சர்வா






**பஞ்சலிங்கம் - விவசாயி (மூன்று கோவிலடி, உரும்பிராய்)**

எங்கடை தோட்டத்திலை விளையிற சகல சாமான்களையும் போகத்துக்கு ஏற்றாப்போல, இந்த சந்தைக்குக் கொண்டு வருவம். சந்தைப்படுத்திறதிலை எந்த பிரச்சினையும் எங்களுக்கு இல்லை. ஆனால் சில நேரங்களிலை இந்தக் கழிவு கழிக்கிறது பிரச்சினையாயிருக்கு. நிலத்துக்கு கீழ விளையிறதுக்கு கழிவு கேட்கிறது நியாயம். ஆனால் பச்சை மிளகாய் போல சாமான்களுக்கும் கழிவெடுக்கிறதை ஏற்க முடியாமல் இருக்கு. 100 கிலோவுக்கு 10 வீதக் கழிவு. இதை எப்பிடி ஏற்கிறது?

"கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி.." விவசாயி என்றொரு தமிழ் சினிமா பாடல் உள்ளது. ஆனால் இந்தத் தொழிலாளி யான விவசாயியை யாழ். குடாநாட்டி லுள்ள சந்தைகளில் கொள்ளை இலாபம் அடிக்கும் வியாபாரிகள் படுத்தும் பாடு இருக்கிறதே அது சொல்லிமாளாது.

தமது விவசாய நிலங்களில் வெயில், மழை பாராது வியர்வை சிந்தி விவசாயம் செய்து அந்த விவசாயத்தின் மூலம் கிடைக்கும் அறுவடையை அதிகாலை வேளை சந்தைக்கு கொண்டு சென்றால் எவ்வித கூச்சமும் இல்லாமல் பத்து கிலோவிற்கு ஒரு கிலோ கழிவு என்ற ரீதியில் அந்த பொருட்களை வாங்கி கொள்ளை இலாபத்தில் விற்பனை செய்வார்கள்.

உண்மையில் வியர்வை சிந்தி உழைத்த விவசாயிக்கு கிடைப்பது நடட்டமே ஒழிய இலாபம் எதுவுமில்லை. உதாரணமாக ஐம்பது கிலோ பயற்றங்காயோ அல்லது கத்தரிக்காயோ, பச்சை மிளகாயோ அல்லது எந்த மரக்கறியாவது கொண்டு சென்றாலும் பத்திற்கு ஒன்று என்ற ரீதியில் ஐந்து கிலோ கழிவு கொடுக்க வேண்டும்.இது சந்தைகளில் எழுதப் படாத விதி. ஐம்பது கிலோவும் 900 கிராமும் இருந்தாலும் அது ஐம்பது கிலோதான்.அதில் எவ்வித மாற்றமும் இல்லை. சந்தையில் வரி அறவிடுபவர்களும் அதனை நிறுதிட்டமாக 50 கிலோ என்று சொல்லி கழிவு 5 போக மிகுதி 45 கிலோ என்று சொல்வார்கள்.

பாருங்கள் எப்படி விவசாயியை சுரண்டுகிறார்கள் என்று. தற்போது பச்சை மிளகாய் 600 ரூபாய் விற்கப்படுகிறது. ஒரு விவசாயிடமிருந்து 50 கிலோ பச்சை மிளகாயை வியாபாரி கொள்வனவு செய்தால் அவர் அந்த பொருளை விற்பனை செய்வதற்கு முன்பே 3000 ரூபாவை உழைத்துவிடுவார்.

பத்துக்கு ஒன்று கழிவு கொடுக்க பச்சை மிளகாயில் அப்படி என்னதான் இருக்கிறது. பச்சை மிளகாய் மட்டுமல்ல மற்றய மரக்கறிகளிலும் அப்படி என்னதான் இருக்கிறது கழிவு கொடுக்க? இவ்வாறு மரக்கறிகளை கழிவில் எடுத்து விற்கும் வியாபாரி தான் கழிவு கொடுத்து விற்பனை செய்கின்றாரா என்றால் அதுவுமில்லை.



**பாஸ்கரன் - சில்லறை வியாபாரி (சுன்னாகம்)**

**சில நேரங்களிலை எடுத்த விலைக்கு வித்துப்போட்டு போற பக்குவமுமிருக்கும். குறைவாக விக்கிற நேரமும் இருக்கு. எங்களுக்குக் கழிவுதான் ஆதாயம். இந்த யாவாரத்தாலை கோட்டை கட்டேலாது. அண்டு தொட்டு இண்டைக்கு வரைக்கும் சைக்கிளிலைதான் வாறம் போறம்.**

அதைவிட யானை விலை, குதிரை விலையில் தான் விற்பார்கள். அவர்கள் சொல்வது தான் விலை.

இது இவ்வாறிருக்க இதைவிட படுமோசம் வாழைக்குலை சந்தைகளில் நடைபெறும் வியாபாரம். பத்துக் கிலோவிலிருந்து 30, 40 கிலோ என்றாலும் ஒரு குலைக்கு மூன்று கிலோ கட்டாயமாக கழிவு கொடுத்தே ஆக வேண்டும். இதில் எந்த மாற்றமும் இல்லை.

இவ்வாறு மரக்கறிகள், வாழைக் குலைகளுக்கு கழிவு வழங்கி பொருட்களை விற்றாலும் பின்னர் விவசாயி சந்தை வரியும் கட்ட வேண்டும். இதுவும் அவர்களின் தலையிலேயே சுமத்தப்படுகிறது. அத்துடன் அடி மாட்டு விலைக்கு பொருட்களை வாங்கும் வியாபாரியும் விவசாயியையே சந்தை வரியை கட்டச் சொல்வார். இவ்வாறு விவசாயியை எவ்வளவு வதைக்க முடியுமோ அவ்வளவிற்கு அதிகாலை வேளை வதைப்பார்கள் சந்தைகளில்.

அப்படியெனில் விவசாயிகளின் இந்தப் பிரச்சினைக்கு தீர்வே இல்லையா? விவசாய உள்ளீடுகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. கடன்பட்டு அவற்றை வாங்கி விவசாயத்தை செய்தால் சந்தைகளில் அவர்கள் மீதான சுரண்டல்கள் குறைந்தபாடாக இல்லை.



**செல்லப்பா - வாழைக்குலை வியாபாரி(ஏழாலை)**

**வாழைக்குலைக்கு கழிவிருக்கு. தோட்டக்காரர் வேணுமெண்டு தாரை நீட்டா விட்டு வெட்டிக்கொண்டு வருவினம். எங்களிட்டை வாங்கிறவை பெரிய தாரோடை வாங்கச் சம்மதிக்காயினம். நிறுத்து வாங்கி நிறுத்து விற்கிறதாலை கழிவு கட்டாயம் வேணும். கழிவில்லாட்டி யாவாரம் செய்யிறது கஷ்டம்.**



**நாதன் - விவசாயி (ஊரெழு)**

**கழிவு எடுக்கக் கூடாதெண்டு எழுதிப்போட்டாலும் கழிவை கழிச்சுக் கொண்டு தான் வியாபாரியள் காசு தருவினம். அவையளோடை இழுபறிப்பட்டுக் கொண்டு நிண்டால் அண்டைய பிழைப்புப் போவிடும். பிரதேச சபை பிரச்சனையளை வந்து சொல்லச் சொல்லித்தான் எழுதிப் போட்டிருக்கினம். போய் சொன்னாலும் எங்கடை வேலையைப் பார்த்துட்டுத்தான் அவை மற்ற வேலையை செய்யப்போயினமோ?**

வடக்கில் ஒரு விவசாய அமைச்சர் இருக்கின்றார். அவர் கடந்த வருடம் கூறியிருந்தார். சந்தைகளில் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க இவ் வருடம் முதல் இந்த கழிவு நடைமுறையில் இருக்காது என்று. அவரின் உறுதி மொழியின் படி இவ் வருட ஆரம்பத்தில் சந்தைகள் அனைத்திலும் எழுத்தில் போடப்பட்டுள்ளது, மரக்கறிகளுக்கு எவ்வித கழிவுகளும் இல்லையென்று. ஆனால் நடைமுறையில் பழைய குருடி கதவைத்திறவடி பல்லவி தான். எழுத்தில் போடப்பட்டுள்ள விடயம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று பார்ப்பதற்கு அவருக்கு எங்கே நேரம். அவருக்கு, ஆயிரம் சோலி.

இப்படித்தான் வடக்கில் பாதீனிய ஒழிப்பு படை என்ற ஒன்றை உருவாக்கினார்.விடுதலைப் புலிகளின் கரும்புலிப் படை போல. அவர்களுக்கு கறுப்பு சீருடைகளும் மருந்து விசிறும்பம்பிகளும் கொடுத்து அவர்களுடன் நின்று போட்டோவும் எடுத்துக் கொண்டார். அதன் பின்னர் பாதீனியஒழிப்புப்படை அப்படியே படுத்துவிட்டது. பின்னர் பாதீனிய ஒழிப்பு விளம்பரப் பலகைகளை வீதிகளில் நாட்டினார். விளம்பரப் பலகை மேலே இருக்க பாதீனியம் அதற்கு கீழே நின்று காற்றுக்கு தனது தலையை ஆட்டி சிரிப்பதுடன் தனது பரம்பலையும் அதிகரித்து வருகிறது.

ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் அது செயற்படுத்தப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இதுநாள் வரை பாதீனியம் தொடர்பாக எத்தனை பேருக்கு தண்டனை பெற்றுக் கொடுத்துள்ளார் அமைச்சர்? பாதீனிய ஒழிப்பு விளம்பர பலகைகளில் ஒரு இலட்சம் ரூபா தண்டம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது நாள் வரை தண்டனை பெற்றவர்கள் தொடர்பாக மக்களுக்கு ஏதாவது அறிவிக்கப்பட்டுள்ளதா என்றால் எதுவும் இல்லை. அது போலத்தான் மரக்கறிகளுக்கான கழிவு தொடர்பாகவும் எத்தனை வியாபாரிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது?

மக்களுக்காகத் தான் அமைச்சர்களே தவிர அமைச்சர்களுக்காக மக்கள் இல்லை. இதை விடுத்து தம்மை விளம்பரப்படுத்த அவர்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையும் வெற்றி பெறாது. பாவம் விவசாயிகள்.

# பூக்கள் (சிறுகதை)

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமுறை பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கிரிதரன் தடுக்கி விழுந்து காலில் ஒரு உரோஞ்சல் காயம் ஏற்பட்ட போது அதிரதன் துடித்த துடிப்பை நேரிலே கண்டிருந்தேன்.

இப்போது ஓரளவு எனக்கு விவரம் புரியத் தொடங்குகின்றது.

"உங்கடை கிரியனா? ஆரது அப்பன்?"

எதுவும் தெரியாதது போல மனதை இறுக்கிக் கொண்டு கேட்கின்றேன்.

"என்ரை கிரியன் இதுதான். இந்தப் பூத்த மரந்தான். அதைப் பிடுங்கினால் எனக்குப் பிடிக்காது சேர்"

தனது சட்டைப்பையிலிருந்து வாளிப்பான ரோஜாப் பூவை எடுத்து எனக்குக் காண்பிக்கின்றான். கண்கள் கொட்டின.

"அழாதையுங்கோ அப்பன் அதி! ஏன் இந்த ரோஜாவைக் கிரியன் எண்டு சொல்லுறீங்கள்?... இது கிரியன் உங்களுக்குத் தந்த ரோஜாவோ சொல்லுங்கோ?"

"இல்லை சேர் இதுதான் கிரியன். இந்த ரோஜாச் செடிதான் கிரியன். நான் அவனைத் தண்ணி ஊத்தி வளர்க்கிறன். அதை சிந்து பிடிங்கிப் போட்டான். அதுதான் அடிச்சனான்".

தேம்பித் தேம்பி அழுது கொண்டே சொல்கின்றான். எனக்கு உள்ளம் கலங்குகின்றது. அவனுடன் நானும் சேர்ந்து அழுதுவிடுவேன் போல இருக்கிறது.

"இஞ்சை அப்பன் அதி! கிரியன் இடம் பெயர்ந்து போய் எங்கையும் வெளிமாவட்டத்திலை இருப்பார் வருவார் தானே. நீங்கள் கவலைப் படக்கூடாது. அவர் வந்து உங்களோடை வகுப்பிலை படிப்பார். என்னப்பன்"

கிரிதரனுக்கு நடந்தது தெரிந்திருந்தும் அதிரதனைத் தேற்றுவதற்காகச் சொன்னேன்.

"இல்லை சேர் என்ரை கிரியன் செத்துப் போனான். அவன் என்னோடைதான் பள்ளிகூடம் வருவான். எனக்குப் பக்கத்திலை தான் இருப்பான். சாப்பிடேக்கை எனக்குத் தன்ரை சாப்பாட்டிலை தருவான். அவன் என்னை விட்டிட்டு போட்டான்"

அந்த ரோஜாப் பூவை மீண்டும் கையில் எடுத்துப் பார்த்து அழுது கொள்கிறான். பின்னர் சட்டைப் பையில் அதனைப் பத்திரப்படுத்திக் கொள்கின்றான்.

எனக்கு இதயத்துச் சுவர்களில் ஈட்டிகள் பாய்வது போன்ற வலி.

இறுதி நாட்களில் கிரிதரனும் அவனது இரண்டு சகோதரிகளும் பெற்றோருடன் இருந்த பதுங்கு குழி மீது ஒரு குண்டு நேரே வீழ்ந்து வெடித்ததாகக் கேள்விப்பட்டிருந்தேன்.

என்னுள் அதிரதனை இழந்து விடக்கூடாது என்ற பரபரப்பு மிஞ்சுகின்றது.

"அதி அப்பன் நாங்கள் கிரியனுக்குத் தண்ணீர் விடுவமா? உங்களுக்கு சிந்துஜனும் உதவி செய்வான் மற்றவையும் உதவி செய்வினம் வாறியளா?"

"ஓம்! சேர், ஓம்!" அவனது முகத்தில் ஒரு ஒளி பட்டென வெட்டியது.

என்னுள் அவனின் அழுகையை ஊடறுத்து விட்டேன் என்ற மகிழ்ச்சி.

"சிந்துஜன் வாங்கோ. மற்றப் பிள்ளைகளையும் கூட்டி வாங்கோ. நாங்கள் அதிரதன்ரை ரோஜாவுக்குத் தண்ணி வார்ப்பம். அதிலை வாற பூவை இனி ஒருதரும் பிடுங்கக்கூடாது. சரஸ்வதி பூசையிலை கடவுளுக்கு வைக்க மட்டும் பிடுங்கலாம் என்னப்பன் அதி"

"ஓம் சேர்" அவனிடம் ஒரு வித மகிழ்ச்சி.

நீரூற்றுவதற்காக எடுத்து வந்த பூவாளியை சிந்துஜனின் கைகளில் நோக்கம் கருதித் திணிக்கின்றேன்.

அந்த இடத்தை விட்டு மெல்ல விலகி நடந்து செல்கிறேன். எட்ட நின்று பார்க்கிறேன்.

சிந்துஜனும் அதிரதனும் கை கோர்த்தபடி தண்ணீர் எடுத்துவரப் போகின்றார்கள். "கிரியனைச்" சுற்றி மற்றப் பிள்ளைகள் வட்டமாக நிற்கின்றார்கள்.

என் கண்ணில் மெல்லிய நித்திரை ஒன்று வந்து மறைகிறது. ■

# வடக்கு விமான நிலையம்: அங்கா இங்கா?





(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)




பலாலியில் அமைக்க முடியாது. அதற்கான காணியை சுவீகரிப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். அப்படியென்றால், மண்டைதீவில் அமைக்கலாம் என்று ஒரு நண்பர் சொல்கிறார். மண்டை தீவில் ஆஸ்பத்திரியைக் கட்டவும் ஒரு ஹொட்டலையும் கட்டுவதற்கும் விரும்பாதவர்கள் எப்படி விமான நிலையத்தை அமைப்பதற்கு ஒத்துக்கொள்வார்கள்? அதை விட, மண்டைதீவு மக்கள் தங்கள் காணிகளை எப்படி விட்டுக் கொடுப்பார்கள்?

சரி, இதை விட்டால், அண்மையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சொன்ன மாதிரி பூநகரி - கௌதாரி முனையில் அமைக்கலாம் என்றால், அதற்குரிய நில அமைவு மற்றும் போக்குவரத்துத் தொடர்பாடல் அத்தனையுமே சாத்திய மேயற்றது. தவிர, அப்படி ஒரு ஒதுக்குப் புறத்தில் விமான நிலையத்தை அமைப்பதென்பது இரண்டாவது மத்தலதான்.

## பொருத்தம் எங்கே?

அப்படியானால், அடுத்து எங்கே அமைக்கலாம்? இரணைமடுவில் ஏற்கனவே இருக்கின்ற புலிகளின் விமான நிலையத்தை மேலும் விரிவுபடுத்தி அமைக்கலாமா? அப்படிச் செய்வதாக இருந்தால் அதற்கு பல ஏக்கர் கணக்கில் காட்டை அழிக்க வேணும். காட்டை அழித்தாலும் ஒரு பெரிய விமான நிலையத்தைக் காட்டின் மத்தியில் அமைப்பது எவ்வளவு பொருத்தமானது? என்ற கேள்வியும் உண்டு. ஆனால், இரணைமடுவில் அமைக்கப்பட்டால், அது வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மட்டுமல்ல, திருகோணமலைக்கும் கூடப் பயனுடையதாக இருக்கும் என்பது இன்னொரு அவதானியின் அபிப்பிராயம்.

இதைவிட வேறு தெரிவுகளும் இருக்கக்கூடும். முல்லைத்தீவில் அமைவது இன்னொருவகையில் நல்லது என்ற கருத்தும் உண்டு. இப்படிச் சொன்னால், இன்னொரு சாரார் வவுனியாவில் அதை அமைக்கலாம் என்பார்கள். சிலர் மன்னாரே பொருத்தமானது என்று சொல்லக்கூடும். இப்படி ஆளாளுக்கு ஒவ்வொரு விருப்பத்தையும் அபிப்பிராயங்களையும் சொல்வர்.

விமான நிலையம் என்பது ஏதோ எங்கள் வீட்டு வரவேற்பறையில் அழகுக்கும் பெருமைக்கும் வைத்துக் கொள்ளும் அலங்காரப் பொருளைப் போல, அவரவர் தத்தம் மாவட்டத்தின் பெருமைக்காக உருவாக்கிக் கொள்வதல்ல. அதற்கும் அப்பால், இந்தப் பிராந்தியங்களில் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முதலீடுகளுக்கும் உற்பத்திகளுக்கும் வாய்ப்பளிக்கும் விதமாக இதை யோசிக்க வேணும். அதுதான் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடியதாக இருக்கும்.

ஆனால், என்னதானிருந்தாலும் வடக்கிலே விமான நிலையம் ஒன்று அமைக்கப்படுவதாக வந்தால் அது நிச்சயமாகப் பெரும் சர்ச்சையில்தான் போய் முடியும். அந்த அளவுக்கு நம்மிடையே ஒற்றுமை உணர்வும் விளக்கங்களும் உண்டு! ■

# மஸ்கெலியாவில் ஆமைத் தபால்

பெருமாள்




ஆங்கிலேயர் வந்து நாட்டைப் பிடித்து நெடுஞ் சாலைகளையும், புகையிரதப் பாதைகளையும் அமைக்கும் வரை மலையகத்திற்குள் நுழைவதும் திரும்புவதும் துன்பமான ஒன்றாகவே இருந்தது. செய்திகள் மலைகளைக் கடந்து போய்ச் சேருவது பகீரதப் பிரயத்தனமாக இருந்தது. ஆனால் தொழிநுட்பமும், வீதி அமைப்புகளும் இலங்கையில் இன்னொரு தேசம் போல துண்டாடப்பட்டிருந்த பகுதிகளை போக்குவரத்தாலும், தொடர்பாட லாலும் இணைத்தன. எனினும் இப்போது மீண்டும் காலம் பின்னோக்கி சுழல்கின்றது போல் இருக்கின்றது.

மஸ்கெலியா நகரில் கடந்த சில வாரங்களாக அஞ்சல் விநியோகம் தாமதமாகியே நடப்பது வாடிக்கையாகி விட்டது. இதனால் நகர் வாழ் மக்கள் பல்வேறு அசௌகரி யங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அட்டன் அஞ்சல் நிலையத்திலிருந்து காலை 6.25 க்கு மஸ்கெலியா அஞ்சல் நிலையத்திற்கு வந்த போதும் அஞ்சல் பொதிகள் வெட்டப்பட்டு தரம் பிரித்து காலை 7.30 மணிக்கு முன் விநியோகம் செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்தவாரம் அஞ்சல் பிரதான வீதிக்கு 11.10க்கே விநியோகிக்கப்பட்டது. இவ்வாறு தாமதித்து அஞ்சல் விநியோகிப்பதற்கான காரணம் மஸ்கெலியா அஞ்சல் அதிபர் அஞ்சல் விநியோகிக்க வேண்டிய நேரத்தில் அஞ்சல் விநியோகிப்பவர்களை அஞ்சல் அலுவலகத்தில் அமர்த்தி அவர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார் என்பதே.

மக்களுக்கு அஞ்சல் விநியோகிக்கும் நேரத்தை வீணடித்து மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி உபதேசங்கள் வழங்குவதை தவிர்த்து இவ்வாறான உபதேசங்களை மாலை வேளைகளில் வைத்து கொள்வதே சாலச் சிறந்தது என மக்கள் தெரிவிக்கின்றனர். அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்யும் வேலைகள் நேரடியாக மக்களைப் பாதிக்கின்றன. செல்போனும் இணையமும் அழித்தவை போக மிச்சமிருக்கும் தபால் சேவையை இவர்கள் முழுவதுமாக அழித்து விடுவார்கள் போலிருக்கின்றது. ■




# வேட்டையாடிகள்

நவீன சட்டங்களின் வன உயிர் பாதுகாப்பு மற்றும் விலங்கு உயிர்க் கருணை நிலைப்பாடுகளால் மேற்படி சமூகங்கள் தமது வேட்டை தொழிலை செய்ய முடியாது புதிய தொழில்களுக்கு மாறி இருப்பதை இன்று அவதானிக்க முடிகிறது.

எஸ்.கிருபானந்தகுமாரன்
(கால்நடை வைத்தியர் )

மனிதன் உணவுக்காகவும் தற்பாது காப்புக்காகவும் விலங்குகளை வேட்டையாட ஆரம்ப காலத்திலேயே தொடங்கிவிட்டான். கற்காலத்தில் வேட்டைக்கு கற்களை கூராக்கியும் மரம் தடிகளை உபயோகித்தும் மிருகங்களின் வலுவான எலும்புகளை பயன்படுத்தியும் மிருகங்களை வேட்டையாடினான். காலப்போக்கில் உலோகங்களின் பயன்பாட்டின் உதவியுடன் ஆயுதங்கள் செய்து அவற்றை பயன்படுத்தியிருந்தான். காலம் செல்லச் செல்ல துப்பாக்கி மற்றும் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி வேட்டையின் வினைத்திறனை அதிகரித்துக் கொண்டான். வாழ்வாதாரத்துக்கு வேட்டையாடிய நிலை மாற்றமடைந்து வியாபாரம், பொழுதுபோக்கு என வேட்டை பரிணாம மாற்றம் கண்டது.

சங்க இலக்கியங்களில் வேட்டை தொடர்பான பல பதிவுகள் உள்ளன. மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களும் வேட்டையை பதிவிட்டிருந்தன. புறநானூறு, பெரும் பாணாற்றுப்படை போன்ற நூல்கள் வேட்டையையும் அது தொடர்பான மனித் வாழ்வியலையும் பாடல்களாக கூறுகின்றன. அன்றைய அரசர்கள் வேட்டையாடுதலை தமது வீரத்தை பறை சாற்றும் கடமையாகவே கொண்டிருந்தனர். வேட்டையாடும் தொழிலை செய்கின்ற மக்கள் குழுவினர், சங்க காலம் முதல் இன்றைய நவீன காலம் வரை இருந்திருக்கிறார்கள். இருக்கிறார்கள். நவீன சட்டங்களின் வன உயிர் பாதுகாப்பு மற்றும் விலங்கு உயிர்க் கருணை நிலைப்பாடுகளால் மேற்படி சமூகங்கள் தமது வேட்டைத் தொழிலை செய்ய முடியாது புதிய தொழில்களுக்கு மாறி இருப்பதை இன்று அவதானிக்க முடிகிறது. இலங்கையின் ஆதிவாசிகள் கூட வேட்டையாடுதலைத் தவிர்த்து வருகின்ற நிலையை அவதானிக்க முடிகிறது. அவர்கள் வேறு தொழில்களை புரிவதோடு அவர்கள் வாழும் பகுதியில் உள்ள இதர சமூகங்களோடு கலந்து வாழ்கின்றனர்.

முன்னைய காலத்தில் வேட்டையாடுதல் ஒரு குறித்த விகிதத்தில், அதாவது சூழலின் நிலைபேறு தகவு நிலையை சிதைக்காத வகையில் சூழல் தொகுதியின் சமநிலையை குழப்பாத வகையில் அமைந்திருந்தது. ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின் போது வேட்டை உயர் அதிகாரிகளின் பொழுது போக்கு சார் விடயமாக மாறி இருந்தது. வகை தொகையின்றி சிறிய முதல் பெரிய பெறுமதியான உயிரினங்கள் காவு கொள்ளப்பட்டன. தொடர்ச்சியான வேட்டையாடுகை காரணமாக சில விலங்கு இனங்கள் முற்று முழுதாக துடைத்தெறியப்பட்டிருந்தன.

இன்றைக்கும் இந்தவகையான ஒரு நிலைப்பாடுதான் காணப்படுகிறது. இலங்கையில் சட்டத்தின் மூலம் இது தடுக்கப்பட்டிருக்கின்ற போதும் காடுகளில் வாழுகின்ற அரிய உயிரினங்கள் வகை தொகை இன்றி வேட்டையாடப் படுகின்றன. மான், மரை, உடும்பு, காட்டுப் பன்றி, முயல்,முள்ளம்பன்றி, கொக்கு,சருகுமான், காட்டுக் கோழி என காடுகளில் வாழும் சகல ஜீவராசிகளும் மனிதனின் வேட்டை வேட்கைக்குள் இருந்து தப்பவில்லை. மேற்கூறிய விலங்குகள் பெரும்பாலும் உணவு நோக்கத்துக்காக வேட்டையாடப்படும் அதேவேளை கொக்குகள், நாரைகள் போன்ற பறவைகள் பொழுது போக்காக வேட்டையாடப்படுகின்றன. யானைகளின் தந்தங்கள் மான், காண்டா மிருகங்களின் கொம்புகள், புலி, மலைப்பாம்புகள், சிறுத்தைகளின் தோல் என விலங்குகளின் உடல் பாகங்கள் வியாபாரச் சந்தையை அலங்கரிப்பதால் உலகெங்கிலும் அவை இலக்கு வைக்கப்படுகின்றன. அண்மையில் கூட சர்வதேச கடத்தல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகை யானைத் தந்தங்கள் இலங்கை உட்பட சில நாடுகளில் எரியூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதை விட வேட்டைக்கு பயன்படும் பொறி வெடி, வெங்காயவெடி, கட்டுத்துவக்கு போன்ற வேட்டை முறைகளால் ஏற்படும் எதிர்பாராத விபத்துக்களால் யானை, மாடு, எருமை போன்ற விலங்குகளும் பாதிப்படைகின்றன.

இந்தக் கட்டுரையை எழுத இலங்கையில் பயன்படும் சில வேட்டை முறைகளையும் அவற்றின் விளைவுகளையும் ஆராய்ந்திருந்தேன்.

(வேட்டை தொடரும்...)

## சொல்லுங்கள் - 05 வெல்லுங்கள்

கீழுள்ள வினாவுக்குரிய விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் ஐவருக்கு பணப்பரிசு காத்திருக்கிறது. பலர் சரியான விடையை எழுதி அனுப்பியிருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**வினா - ஜூலை 8 ஆம் திகதி காஷ்மீரில் சுட்டுக் கொல்லப்பட்ட போராளியின் பெயர் என்ன?**

**விடை:.................................................**

முதற்பரிசு - ரூபா. 2000.00
இரண்டாம் பரிசு - ரூபா. 1500.00
மூன்றாம் பரிசு - ரூபா. 1000.00
ஆறுதல் பரிசுகள் - ரூபா. 500.00 இருவருக்கு

**முடிவுத்திகதி: 26.07.2016**

அனுப்பவேண்டிய முகவரி:

"சொல்லுங்கள் வெல்லுங்கள்" - 05

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## சொல்லுங்கள் வெல்லுங்கள் -03 முடிவுகள்

**விடை : ஓவியர் ஆசை இராசையா**

**முதலாம் பரிசு - ரூ. 2000**
திருமதி.U.M.P. ஜெயறோஸ்
யா/இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு - ரூ. 1500**
கா.பொ.இ. குலசிங்கம்
5 ஆம் வட்டாரம், நயினாதீவு.

**மூன்றாம் பரிசு - ரூ. 1000**
P.Sumithra
5-2/1,17th Lane, College Street,
Colombo - 13

**ஆறுதல் பரிசு - (தலா ரூ.500 வீதம்)**
i. காயத்திரி மகேந்திரராஜா
"சிவ இல்லம்"
புலோலி தெற்கு, புலோலி.
ii. குணரட்ணம் உமாகாந்
போதனா வைத்தியசாலைலை,
யாழ்ப்பாணம்.

(பரிசில்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்)

### பாராட்டுப்பெறுவோர்

- திருமதி. வத்சலா துரைசிங்கம் - பன்னாலை
- கே.இராஜகோபால் - வட்டுக்கோட்டை
- ப.அருள்ராசன் - சித்தங்கேணி
- ஸ்ரீ.சொரூபிகா - வட்டுக்கோட்டை
- க.நிருஜன் - யாழ்ப்பாணம்
- நே.பிரேமதாஸ் - அச்சுவேலி
- தே.தேவசாந்தன் - யாழ்ப்பாணம்
- பிருதுவி - கரவெட்டி
- எம்.என்.கருணாநிதி - காரைநகர்
- சி.அன்னலிங்கம் - சுழிபுரம்
- குயின் றோசறி கிறிஸ்ரின் - ஊர்காவற்துறை

# ஆறாவடு

## தொடர்கதை

சயந்தன்




**திரும்பி வருவதற்கிடையில் டொல்பின் வாகனமொன்று கடற்கரையில் வந்து நின்றது. சிங்களத்தில் கதைக்கிற ஆட்கள் குதித்துக்குதித்து இறங்கினார்கள். துலஞ்சம் என்றான் இவன். சின்னப்பெடியன் தலையைத் திருப்பி அவர்களை மிரட்சியுடன் பார்த்தான்.**

ஏஜென்சி குறித்துக் கொடுத்த இடம் நீர்கொழும்புக் கடற்கரையோடு குடிமனைகளை அண்மித்திருந்தது. கொஞ்சம் சனநடமாட்டமும் இருந்தது. கரையில் கூடி நின்ற இளைஞர்களை சனங்கள் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. அவர்கள் பழக்கப்பட்டிருக்கலாம்.

சென்ற முறை வந்திருந்த நான்கைந்து பேர் இம்முறை வரவில்லை. அவர்களுக்கு வேறு ரூட்டுக்கள் சரிவந்திருக்கலாம். அல்லது பழம் பிடுங்கிற விசாவில் போயிருக்கலாம், அவர்களைத் தவிர மிச்ச ஆட்கள் அங்கு நின்றார்கள் . ஓரிரண்டு புதிய ஆட்களையும் இவன் கண்டான்.

சின்னப்பெடியன் முன்னரே வந்திருக்க வேண்டும், இவனின் பக்கத்தில்



வந்து சிநேகமாகப்பாரத்தான்.

“தம்பி ஆரோடை வந்தனீர்?”

“அம்மா” என்று அருகில் ஒரு பெண்ணைக் காண்பித்தான். இவன் முகத்தை அசைத்துச் சிரித்தான். அவரது முகம் இருளடைந்திருந்தது. அதற்கூடாக அவரது சிரிப்பு ஒரு கோடு போல உருவாகி மறைந்தது. “குறை நினைக்காமல் இவனை ஒருக்கா பார்த்துக்கொள்ளுங்கோ” என்றார் அவர்.

இவன் சரி என்று தலையாட்டினான் “நீங்கள் குறைநினைக்க கூடாது அவர் சின்னப்பெடியனா இருக்கிறார். நீங்கள் தனிப்பயணத்துக்கு அனுப்புறியள்..” என்று மேலும் எந்த வார்த்தைகளைக்கொண்டு நிரப்புவதென்று அறியாது இவன் இடைநிறுத்தினான்.

சின்னப்பெடியனின் அம்மா முகத்தைக் கடல் வெளியை நோக்கித் திருப்பிக்கொண்டார். “அப்பா செத்த பிறகு பிறந்தவன். வயித்தில இரண்டு மாசம் இருக்கேக்கை, இந்தியன் ஆமி அவரைச்சுட்டது. ஏதோ பெயர் மாறிச்சுட்டதென்று சொன்னவை. அதுக்குப்பிறகும் பதினைஞ்சு வருசம் எல்லாக் கஸ்ரமும் பட்டிட்டன். என்ர தம்பியொருத்தன் வெளியில போன பிறகுதான் கொஞ்சம் மீண்டம். இப்பவும் அவன்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தது. ஏதோ மாமன்காரனிட்ட போய் இவனொரு நல்ல நிலைக்கு வந்திட வேணும். அதுக்குப்பிறகு எனக்கொரு வாழ்கையுமில்லை” குரல் தளுதளுக்கத்தொடங்கிய போது அவரும் நிறுத்திக்கொண்டார். சின்னப்பெடியன் நீரில் கால்களை நனைத்தபடி குனிந்து அதையே பார்த்தவாறு நின்றிருந்தான்.

கடற்கரையில் ஆட்கள் சேர்ந்திருந்தனர். ஆளாளுக்கு மெதுவாகப் பேசிக்கொண்டு நின்றனர். ஏஜென்சி அனுப்பிய ஆட்கள் என்று இரண்டு பேர் வந்திருந்தனர். தங்களுக்குள் சிங்களத்தில் பேசிக் கொண்டார்கள்.

பெரிய குடிதண்ணீர் பரல் ஒன்றையும் அரிசி மூட்டையொன்றையும் பாதிப் பருப்புச் சாக்கொன்றையும் பெரிய கருவாட்டுச் சிப்பமொன்றையும் வாகனத்திற்குள் இறக்கி, கடலில் படகொன்றில் வைத்து தள்ளிக்காணாமல் போய், கொஞ்ச நேரத்தில் அவர்கள் திரும்பி வந்தார்கள். இன்னொரு பெட்டியில் குளுக்கோஸ், செலைன், எலுமிச்சம் பழங்கள் என ஏற்றிக் கொண்டு போனார்கள். திரும்பி வருவதற்கிடையில் டொல்பின் வாகனமொன்று கடற்கரையில் வந்து நின்றது. சிங்களத்தில் கதைக்கிற ஆட்கள் குதித்துக்குதித்து இறங்கினார்கள்.

“துலஞ்சம்” என்றான் இவன். சின்னப்பெடியன் தலையைத் திருப்பி அவர்களை மிரட்சியுடன் பார்த்தான். ஏஜென்சிக்காரன் பருத்த உடலை அரக்கி அரக்கி இறங்கி நடந்து வந்துகொண்டிருந்தான். எதிர்ப்பட்ட இளைஞன் ஒருவனிடம் “இப்ப சந்தோசம் தானே” என்றான்.

“சிங்கள ஆக்கள் என்னத்துக்கு இங்கை வந்தவை” என்ற யோசனை மட்டுமே இவனுக்குள் நின்றது. அவர்கள் ஒவ்வொருவரிடமும் இவனிடமிருப்பதைப் போன்றே சின்ன ட்ரவலிங் பைகள் இருந்தன, அவர்களும் தங்களோடு வரப்போகிறார்கள் என்பது அவனுடைய மனதை அரிக்கத் தொடங்கியது. அதுவரை ஊறி நின்ற சந்தோசம் கால்களின் கீழே அலைநீரின் மணலைப் போலே கரைவதை உணர்ந்தான். அவர்களில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று மனது எண்ணத்தொடங்கியது. அதுவரையும் அங்கேயும் இங்கேயுமென ஓரிரண்டாக நின்ற தமிழ் இளைஞர்கள் சிங்களவர்கள் வந்த பிறகு ஒன்றாகக் கூடி நின்றார்கள்.

ஒவ்வொரு பத்துப்பேராகப் போய் வள்ளமொன்றில் ஏறச்சொன்ன போது சிங்கள இளைஞர்களே முதலில் போய் ஏறிக்கொண்டார்கள். இவன் முறை நான்காவது தடவை வந்தது. சின்னப் பெடியனும் இவனோடேயே ஏறிக்கொண்டான். அது மீன்பிடி வள்ளம். மோட்டார் இஞ்சினை இயக்காது தடிகளினாலேயே ஊன்றி வலித்துக்கொண்டு போனார்கள். ஆளையாள் நெருக்கிக்கொண்டு ஐம்பது பேர் அதற்குள் இருக்கலாம். வள்ளத்தின் பாதிக்கு மூடி அடைக்கப்பட்ட கூட்டுக்குள் ஒரேயொரு டிம் லைற் எரிந்துகொண்டிருந்தது. இருட்டுக்குள் எதுவும் பிடிபடவில்லை. கடலுக்கு முதுகைக்காட்டிக்கொண்டு எல்லோரும் இருந்தார்கள். இன்னும் இரண்டு குருப்பில் வந்தவர்கள் ஆட்களுக்கு நடுவில் இடம் பிடித்துக் கொண்டார்கள்.

இவன் ட்ரவலிங் பை பொக்கற்றுக்குள் கைவிட்டு காய்ந்து முறுகிப்போயிருந்த வெற்றிலையில் படிந்திருந்த வீபூதியை எடுத்துப் பூசிக் கொண்டான். எஞ்சின் அறைக்குள் இருந்து ஒருவன் வந்து ஒவ்வொருவராக “எக்காய் தெக்காய் துனாய் கத்தறாய்” என்று எண்ணிக்கொண்டு போனான். எஞ்சின் சத்தமும் டீசலின் வாசமும் பரவத்தொடங்கின. டீசலின் மணம் வயிற்றைக் குமட்டுவது போலிருந்தது. கொஞ்ச நேரத்திலே “க்வாக்” என்ற சத்தத்தோடு சின்னப்பொடியன் இவனுக்கு மேல் ஓங்காளித்து சத்தியெடுத்தான். வேறு யாரும் சத்தியெடுப்பதைப் பார்த்தால் இவனுக்கும் சத்தி வரும். கண்ணை மூடிக்கொண்டு சேர்ட்டை கழட்டி சுருட்டி வைத்து விட்டு இன்னொரு சேர்ட்டை போட்டான். காலை நீட்டிய போது அது யாரோவில் முட்ட சட்டென்று இழுத்துக்கொண்டான். சின்னப்பெடியன் இவனது மடியில் நித்திரையாகிப்போயிருந்தான். மணிக்கூட்டில் பச்சை வெளிச்சத்தில் நேரம் இரவு பதினொன்றைத் தாண்டியிருந்தது. எஞ்சின் சத்தம் ஒன்றைத் தவிர கடல் அமைதியாக இருந்தது.

இவன் இத்தாலிக்கு எந்த ரூட்டால் போவது என்று திரும்பவும் யோசிக்கத் தொடங்கினான்.

**(வலிகள் இன்னும்...)**

## தீர்க்காயுசு



*தீர்க்காயுசு எது தெரிந்தால் சொல் என்றேன்.*
*நூறு வயது வாழ்வதே என்றான்.*
*சிரிப்புத்தான் வந்தது.*
*நாற்பதிலே யாரும் நம்மைப் பார்ப்பதில்லை ,*
*ஐம்பதிலே நாம் சொல்வதே வம்பாகிறது,*
*அறுபது தாண்டினால் இருப்பதே தண்டமாகிறது.*
*எழுபது என்கிற போது உண்பதுமில்லை , உறங்குவதுமில்லை ,*
*தொண்ணூறைத் தொடும்போது தோல் வற்றிப்போகிறது.*
*நூறுக்கு வாழ யாருக்கு வரும் ஆசை ?*
*உண்டது செரித்து திடமுடன் வாழ்வதே*
*தீர்க்காயுசு இல்லாது போனால் தீர்ந்தது*
*தீர்க்காயுசு*

ஏ.கே.எம் மஸ்ஹூர்
(மாவனெல்லை)

படித்ததில் பிடித்தது

# கொடி பறக்குது



தணிகன்

இலங்கையில் ஆங்கிலேயர்களால் எல்லாமாக 25 வெளிச்சவீடுகள் கட்டப்பட்டிருப்பினும் தற்போது இருக்கும் 22 வெளிச்ச வீடுகளுள் இயங்கு நிலையில் இருப்பவை 17 மட்டுமே. அவற்றுள் வடக்கில் இருக்கும் ஐந்து வெளிச்ச வீடுகளுள் பருத்தித்துறையில் உள்ள வெளிச்ச வீடே உயரமானதும் (32m / 105 அடி) நூற்றாண்டு பழமையானதும் ஆகும். இது இலங்கையின் வட முனையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பருத்தித்துறையில் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் 1916 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது.

வெள்ளை நிறக்கற்கள் கொண்டு கூம்பு வடிவில் அமைக்கப்பட்ட இந்த வெளிச்ச வீடானது வடமராட்சி பிரதேசத்தின் மிகமுக்கியமான வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஒவ்வொரு ஐந்து வினாடிகளுக்கும் ஒருமுறை சமிக்ஞை செய்யப்படும் வெளிச்சமானது கடலில் 12 மைல்கள் தூரம் வரை தென்படக்கூடியது. இலங்கையின் அனைத்து வெளிச்ச வீடுகளும் இலங்கை துறைமுக அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழே உள்ள போதும் விதிவிலக்காக வடபகுதி வெளிச்ச வீடுகள் ஆயுதம் ஏந்திய கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

ஆயுதப்போர் முடிவுக்கு வந்து 7 வருடங்களுக்குப் பிறகும் பருத்தித்துறையில் கடற்படை முகாம் இன்னும் அந்த வெளிச்ச வீட்டை சுற்றி ஆக்கிரமித்துத் தான் உள்ளது. 20 ஆண்டுகளுக்கு பிறகு மக்கள் அந்த வெளிச்ச வீட்டைப் பார்வையிட கடந்த ஆண்டு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பினும் தென்னிலங்கையிலிருந்து பெரும்பான்மையின மக்கள் பார்வையிட வருமிடத்து அவர்கள் அதில் ஏறிப் பார்வையிடவும் அனுமதி வழங்கப்படுகின்றது. நாம் கடந்த வாரம் சென்றவேளை நமக்கு பார்வையிட மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. ஏறிப்பார்ப்பதற்கான அனுமதி கடற்படையினரால் காரணம் கூறாமல் மறுக்கப்பட்டது.

எங்களுடன் கூட வந்த ஊர்ச் சிறுவன் ஒருவன் வெளிச்ச வீட்டின் உச்சிக்கு ஏற முற்பட்டவேளை அங்கு காவலிலிருந்த கடற்படை சிப்பாயால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் வன்மையாக கண்டிக்கப்பட்டிருந்தான். அண்மையாக வெசாக் விடுமுறை காலத்தில் அங்கு வந்த சிங்கள மக்களுக்கு மட்டும் உச்சி வரை ஏறிப் பார்க்க அவர்கள் அனுமதித்திருந்தனர் என்று அச் சிறுவன் தெரிவித்தான். மேலே ஏற முடியாதா? என்ற எமது கேள்விக்கு அது பாது காப்பில்லை என்று அந்தச் சிப்பாய் தெரிவித்தார். தமிழ் மக்களது பாது காப்பில் அவ்வளவு கருத்துடன் உள்ளார்கள் போலும்.

பாதுகாப்பு காரணம், திருத்தவேலை என்று என்ன தான் காரணம் கூறினாலும், எமது சொந்த ஊரில் இருக்கின்ற தொன்மங்களை பார்வையிட வேண்டும் என்றால் கூட எங்கள் சொந்த வீட்டின் கதவை வேறொருவன் திறந்தால் தான் முடியும் என்ற ஈன நிலையில் தான் நாம் இன்னும் இருக்கின்றோம். வெளிச்ச வீட்டை மீட்டுத்தருமாறு மீனவ சங்கத்தால் கடந்த ஆண்டு கோரிக்கை விடப்பட்டும் இன்னும் அந்த கோரிக்கைக்கு எந்தப் பலனும் கிட்டவில்லை.

இதெல்லாம் ஒரு புறம் என்றால் எல்லாவற்றையும் விட பெரிய சம்பவம் ஒன்றை வெளிச்சவீட்டின் உச்சியில் அரங்கேற்றியுள்ளார்கள். அது ஒரு வர்ணக் கொடி. பருத்தித்துறை கடல் காற்றுக்கு வெளிச்சவீட்டின் உச்சியில் கம்பீரமாகப் பறக்கின்றது பஞ்சவர்ண பௌத்த கொடி.

அது எப்போது பௌத்த சின்னமாக மாறியதென்று தெரியவில்லை. இந் நாட்டின் தேசியக்கொடியை பறக்க விட்டிருந்தால் கூட பரவாயில்லை ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அது எப்படி வரலாற்று சின்ன மொன்றை பௌத்த சின்னமாக சித்தரிக்கும் முகமாக பௌத்த கொடியை பறக்கவிடலாம்? இந்த நிலை தொடருமானால் வருங்காலங்களில் அங்கு நிலை கொண்டுள்ள கடற்படை சிப்பாய்களது உள்ளாடைகள் கூட பறக்க விடப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்படியே எமது பிரதேசங்களில் உள்ள எல்லா வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த பிரதேசங்களும், பண்பாட்டு சின்னங்களும் கையகப்படுத்தப்படுகின்றன. இதை ஊர் மக்களும் பெரிய விடயமாக பார்ப்பதாகத் தெரியவில்லை. அரச அதிகாரிகளோ இல்லை, தமிழ் அரசியல்வாதிகளோ கண்டுகொள்வதாகக் கூட தெரியவில்லை. நாம் இவ்வாறான விடயங்களுக்கு பழக்கப்பட்டு விட்ட தாகவே புலப்படுகின்றது.

இப்பொழுது அங்கு ஒரு பௌத்த கொடி பறக்கின்றது, பின்னர் அரச மரம் தானாகவே முளைக்கும், அதன்கூடவே சேர்ந்து புத்தரும் ஒரு நள்ளிரவில் சுயம்பாகத் தோன்றுவார். இறுதியாக பருத்தித்துறையானது 'பேதுறுதுடுவ' என்று வர்த்தமானியில் மாற்றப்படும்.

சங்கமித்தை இலங்கை வந்த சமயம் ஜம்புகோள துறையில் இறங்கி பருத்தித்துறை வரை பாதயாத்திரை சென்று பின்னர் கந்தரோடை வழியாக அனுராதபுரத்தை அடைந்ததாக வரலாற்றுப்பலகையும் வைக்கப்படும். அன்றும் மௌனித்தே இருப்போம்.

"இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்..."

## மரபுரிமைப்போட்டி - 05

**மாயக்கை எனும் நிலக்கீழ் கற்காலகுகை எங்கே அமைந்துள்ளது?**

சரியான விடை எழுதி அனுப்புபவர்களில் ஒருவருக்கு குலுக்கல் முறையில் ரூபா. 1000 பரிசாக வழங்கப்படும். முடிவுத் திகதி 26.07.2016

அனுப்பவேண்டிய முகவரி: புதுவிதி, 107, இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## மரபுரிமைப்போட்டி - 03 முடிவு

சரியானவிடை - பருத்தித்துறை

**வெற்றிபெற்றவர்:**

**திருமதி.வசந்தலா துரைசிங்கம்**
ஆழ்வாண் கிணற்றடி பன்னாலை,
தெல்லிப்பளை.



# செக்கு

நம்முடைய நிலத்தின் உணவுப் பண்பாட்டுடன் தொடர்புடையதும் பழமையான தொழில் முறைகளில் ஒன்றாகவும் காணப்பட்டவை செக்குகள். மின்சாரத்தை குடித்து சத்தத்துடன் பண்டங்களை அரைத்து துப்பும் இயந்திரங்கள் நுழையாத தன்னிறைவு வாழ்கையை வாழ்ந்த எம்முடைய மக்கள் கண்டறிந்த அரைக்கும் கருவி இந்த செக்கு.

கொப்பறா, எள்ளு, கடலை, முதலான மூலப் பொருட்களை அரைத்து எண்ணெய் வகைகளை எடுத்து கொள்வதற்காக, பொருத்தமாக குடையப்பட்ட மரத்தின் அடிப் பாகம் ஒன்றில் பெரிய அரைக்கும் மரம் இறக்கப்பட்டு, செக்கு மாடுகளுடன் அதன் அந்தம் இணைக்கப்பட்டு மாடுகள் சுற்றிவர எண்ணையும், பிண்ணாக்கும் கிடைக்கும்.

செக்கின் அடிமரம் பொதுவாக புளிய மரத்தின் தண்டில் இருந்து தயாரிக்கப் படுகிறது. அத்துடன் கடையும் அச்சு முதிரை, பாலை மரங்களில் இருந்து தயாரிக்கப் படுகிறது. முன்னர் செக்கை இயக்க மாடுகள் பாவிக்கப்பட்டன. தற்போது சில மாற்றங்களுக்குட்பட்டு லான் மாஸ்ரர் பயன்படுகிறது.

தமிழர் பண்பாட்டில் செக்கு என்பது மிகத் தொன்மையான ஒரு தொழிநுட்பமாகும். தமிழர் பகுதிகளில் 2000 வரையிலும் பலசெக்குகளை காணக்கூடியதாக இருந்த. போர்ச் சூழல் மின்சாரமோ எண்ணையோ வர அனுமதிக்காத காரணத்தால் 2000 வரை மட்டும் பல செக்கு ஆலைகள் இயங்கிவந்துள்ளன. இன்றும் ஒரு சில இடங்களில் சொந்தத் தேவைக்காக செக்கு பயன்படுத்தப்படுகின்றது.

ஒப்பீட்டளவில் காலமாற்றம் செக்கை இல்லாது போகச் செய்தாலும் செக்கு பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தவும் அடுத்த தலைமுறைக்குகடத்தவும் வேண்டும். நம்முடைய மரபை அறிந்து கொள்ளுதல், நமது கடந்த காலத்தின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளுதல் நம் சமூக இருப்பிற்கு இன்றியமையாதது தானே?

# கலையாக மாறும் வீசுபொருட்கள்

கணபதிசர்வானந்தா

சிறிதொன்றைச் செய்து பின் பெரிதெனப் பேசுவது மனித இயல்பாகக் காணும் இன்றைய உலகில், சமூகநலன் சார்ந்த பாரிய பணியொன்றைச் செய்துவிட்டு பணிவுடன் காரிய மாற்றிக்கொண்டிருப்பவர் திருமதி எஸ். மஞ்சுளா ஸ்ரீரங்கதாஸ் வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி சங்கத்தின் தலைவியான இவர் நாடெங்கிலும் பல கைப்பணியாளர்களை உருவாக்கியிருக்கிறார். இவரினால் உருவாக்கப்பட்ட 3500 க்கு மேற்பட்ட பதிவு பெற்ற கைப்பணியாளர்கள் சுயதொழில் முயற்சியாளர்களாக உள்ளனர். அது மட்டுமல்ல இத்துறை சார்ந்த சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி இதுவரை 2 தேசிய விருதுகள் உட்பட 39 விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

தேசிய அருங்கலைகள் பேரவையினூடாகப் புலமைப் பரிசு கிடைக்கப் பெற்று 4 தடவைகள் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியிருக்கிறார். தற்போது குவைத்திற்குச் செல்வதற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு தொழில் நுட்பக்கல்லூரியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நாகரீக ஆடை ஆபரண தயாரிப்புத் தொடர்பான கல்வித்துறையில் பகுதிநேர விரிவுரையாளர் பதவிக்கு தேர்வாகியிருக்கிறார் மஞ்சுளா. இத்துறையின் விரிவுரைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. எதிர்வரும் காலங்களில் யாழ் பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் வடிவமைப்புத் துறையில் ஆடை அலங்கார ஆபரண வடிவமைப்புக் கலையையும் ஒரு பாடத்திட்டமாக சேர்க்க வெண்டுமென்ற கோரிக்கையை உரியவர்களிடம் பேசி நடைமுறைப்படுத்துவதில் ஆர்வமாயிருக்கிறார்.

யாழ்ப்பாணம், அரியாலையிலுள்ள மகாபஷன் கோர்னர் அன்ட் அகடாமி என்ற நிறுவனம் இவருடையது. இவர் 2010 இல் இந்த நிறுவனத்தை ஆரம்பித்து அதன் மூலம் பல கைவினைப் பொருட்களைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார். இவரின் ஏற்றுமதிப் பட்டியலில் அலங்காரச் சேலைகள், ஓவியப் புடவைகள், கண்ணாடிச் சித்திரங்கள், ஓவிய மட்பாண்டங்கள், திரை ஓவியங்கள், கடதாசிக் கைப்பணிப் பொருட்கள், சுவர் சித்திரங்கள், வலைப் பூக்கள், நாகரீக ஆபரணங்கள், பட்டு நூல் ஆபரணங்கள், துணிகளாலான ஆபரணங்கள், ஜடை நாகம், வாழ்த்து மடல்கள், நாகரீக மெழுகு வர்த்திகள் என பலவகைப் பொருட்கள் அடங்குகின்றன. கால மாற்றத்திற்கேற்ப மக்கள் இரசனைகளும் மாறுபடுவதால் இவரின் புதிய உருவாக்கங்களுக்கு சர்வதேச சந்தைப் பெறுமானம் அதிகரித்திருக்கிறது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினூடாக ஏற்றுமதியை அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் இவர், தனது நிறுவனத்தின் ஊடாக நடத்தும் வகுப்புக்களில் ஏறத்தாழ 13 விதமான கைப்பணிப் பொருட்களின் ஆக்கம் பற்றி சொல்லிக் கொடுக்கிறார்.



★ வளையல்



★ வாழ்த்து மடல்

இத்தகைய வகுப்புகளினூடாகப் பயிற்சி பெற்ற 1000 பேருக்கு மேலானவர்கள் சுயதொழில் முயற்சியாளர்களாக உள்ளனர் எனப்பெருமைப்படும் மஞ்சுளா, வவுனியா கச்சேரியில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஒரு அரச உத்தியோகத்தவராவர்.

**மிகவும் அற்புதமாக வடிவமைக்கப்படும் இத்தகைய பொருட்கள் கொழும்புச் சந்தையில் பெரு விலைக்கு விற்பனை செய்யப் படுகின்றன.**



★ Book Mark



இத்தகைய கலைப்பொருளாக்க முயற்சியில் அவருக்கிருந்த ஆர்வம் காரணமாக தனது அரசபணியிலிருந்து ஓய்வு பெற்றவர். அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் முயற்சிக்கு, வீட்டார் மட்டும் துணை நின்றனர் என்றும் உறவுகள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்ததாகவும் சொல்கிறார் அவர். அரச பணியில் தனக்குக் கிடைத்த ஊதியத்தைவிடப் பலமடங்கை, இத் துறையில் வருமானமாகப் பெறுவதோடு மனதுக்கு நிறைவைத்தரும் ஒரு பொதுப் பணியாகவும் இருப்பது மகிழ்வைத் தருவதாக சொல்லும் மஞ்சுளா, இந்தியாவிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வடிவமைப்புக்கான விசேடகற்கை நெறியினைக் கற்றிருக்கிறார்.தான் இன்னும் இத் துறையில் கற்றுக் கொண்டிருப்பதாகவும் சொல்கிறார். இவரின் கலைப் படைப்புகள் பல வற்றிற்கு சமூகத்திலிருந்து பாவனைக்குப்பின் ஒதுக்கப்படுகின்ற பொருட்களே மூலப் பொருளான உள்ளன. மரத்திலிருந்து பறித்தெடுக்கப்படும் பூக்களை உலரவைத்துப் பயன்படுத்தி வடிவமைக்கும் வாழ்த்து மடல்களுக்கு இந்தியாவில் அதிக வரவேற்பிருப்பதாகச் சொல்கிறார் மஞ்சுளா.

வழமையாக, மிகவும் அற்புதமாக வடிவமைக்கப்படும் இத்தகைய பொருட்கள் கொழும்பு சந்தையில் பெரு விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தலை நகரிலுள்ள "ஒடேல்" (ODEL) மற்றும் "பெயார்ப்பூட்" (BARE FOOT) ஆகிய நிறுவனங்களே இத்தகைய பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். இவைகள் பெரும்பாலும் சுற்றுலாப் பிரயாணிகளின் கொள்வனவு மையங்களாக இருப்பதைக் காணலாம். அவர்கள் திரும்பிச்செல்லும் போது இலங்கை விஜயத்தின் நினைவாக இத்தகைய பொருட்களை எடுத்துச் செல்லுகின்றனர்.

"தொழில் துறைத் திணைக்களத்தினால் காட்சிக் கூடம் ஒன்றை அமைத்துத் தந்திருக்கின்றார்கள். இதனை யூலை மாதம் 11 ஆம் திகதி திறந்து வைத்துள்ளோம். இதனூடாக எமது உறுப்பினர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதே எமது நோக்கம். எங்களுக்குத் தேவையான மேலதிக பயிற்சிகளை தொழில் துறைத் திணைக்களத்தினூடாகவும் தேசிய அருங்கலைகள் பேரவையினூடாகவும் பெற்று வருகிறோம். கைப்பணியாளர்கள் எல்லோரையும் அங்கீகரிக்கக் கூடிய சட்ட நடைமுறையொன்றை வரைபுபடுத்துவதன் மூலமே கைப்பணியை கற்பதற்கான ஆர்வத்தினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தலாம். அவர்களுக்கென ஓய்வூதியத் திட்டமொன்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்" என்கிறார் அவர். அரசு தரப்பில் அதுபற்றிப் பேசப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் நடைமுறைப்படுத்துவதில் சாத்தியம் தென்படுவதாகவும் சொல்லுகிறார். கற்பனை வளமும் ஆக்கத்திறனும் உள்ள அனைவரும் கைப்பணியாளர்களாகலாம். ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி பொழுது போக்காகச் செய்யக்கூடிய இந்தத் துறையில் அதிக வருவாயைப் பெற்று வளமாக வாழலாம் என்று சொல்லும் மஞ்சுளாவே இதற்குச் சான்றாகவும் இருக்கிறார்.

---

கதிர்காம ஆடிப்பெருவிழாவை முன்னிட்டு பாதையாத்திரையாக செல்லும் பக்கதர்கள் கதிர்காமத்தை நெருங்கியுள்ளனர்.

குமணதேசிய சரணாலயத்திலுள்ள ஸ்ரீமுருகன் ஆலயத்தில் வந்து தங்கிய யாத்திரீகர்களுக்கு தேனீர், உணவு, மருத்துவ உதவிகள் என்பன வழங்கப்பட்டன.

இவர்களுக்கு உழவு இயந்திரம் ஒன்றை இந்து சமய கலாசார அமைச்சு வழங்கினால், பயணம் இலகுவாக அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. **(படமும் தகவலும் - பெருமாள்)**





# பனித்தேச வடலி

05

கபிலன்

பரந்த வெளிகளில் வெள்ளைத் துணியால் மூடியது போல் பனி சூழ்ந்திருக்கும். அந்த வெளிகளில் எங்களின் கால்களை வைத்து சிறிது தூரம் நடந்து விட்டு திரும்பி பார்ப்போம். யாருடைய பாதங்களும்படாத ஒரு தேசத்தில் எங்களின் கால்களை பதிந்து விட்டது போல் உற்சாகப்பட்டுக் கொள்வோம்.

நான் இங்கு குடியேறிய போது அப்பா ஒரு பலசரக்கு கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். என்னையும், தம்பியையும், அம்மாவையும் இங்கே அழைத்துவருவதற்கான ஏஜென்சி பணத்தையும் கட்டிக்கொண்டிருந்தார். எனது மூன்று ஏனைய சகோதரர்களும், மாமா மற்றும் பாட்டியின் பராமரிப்பில் விடப்பட்டனர்.

> உனக்கென்ன தெரியும், என்று ஓரங்கட்டப் பட்டு விடுவேன். அநேகமான சண்டைகளில் ஒருவரை ஒருவர் மாறி குற்றத்தை சுமத்துவார்கள். தங்களிடம் தவறு இருக்குமா என்பதை பற்றியெல்லாம் சிந்திப்பதில்லை.

நானும் அப்பாவும் முதல் முறை சந்தித்த போது எப்படியிருந்திருக்கும் என்பதை எந்தச் சொற்களை வைத்து எழுதுவது? இந்த உணர்வுகளை எழுத்தின் மூலம் கொண்டு வருமளவிற்கு நான் ஒன்றும் பெரிய எழுத்தாளனில்லை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். அதனை உங்களின் கற்பனைக்கே விட்டு விடுகின்றேன்.

நான் கைக்குழந்தையாக இருந்த போது அப்பாவைப் பார்த்ததாக சொல்லக் கேட்டிருக்கின்றேன். எனக்கு எந்த நினைவுகளும் இல்லை. எனது 9 ஆவது வயதில் முதல் முறை பார்க்கும் போது உணர்வற்ற நிலையிலயே இருந்தேன்.

எனது அப்பா வழக்கம் போல் வேலைக்கு சென்று கொண்டிருந்தார். எனது அம்மாவோ அவரின் சுமையை குறைப்பதற்கு தானும் வேலைக்கு செல்ல வேண்டும் என்ற மனநிலையில் இருந்தார். விட்டுவந்த ஏனைய சகோதரர்களை இங்கே கூப்பிடுவதென்றால் இன்னும் அதிகம் பணம் தேவை. அதுவரை தொலைக்காட்சி பார்ப்பதிலேயே நாங்கள் நாட்களைக் கொன்று கொண்டிருந்தோம்.

பிறந்தநாள் விழாக்கள் மற்றும் திருமண விழாக்களில் தான் எங்கள் அன்றாட வாழ்க்கையிலிருந்து சற்று மாற்றம் கிடைத்தது. அப்பொழுது இப்படியான விழாக்கள் சிறிய வட்டத்திற்குள் நடந்து முடிந்தது. கூடுதலாக அந்த கிராமத்திலோ அல்லது மாநிலத்திலோ உள்ளவர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். கார் வசதி என்பது அப்பொழுது யாரிடமும் இருக்கவில்லை என்பது இதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

இந்தக் கொண்டாட்டங்கள் மூலம் அவர்கள் தங்கள் நண்பர்களுடனும் ஊரவர்களுடனும் கூடி மகிழக்கூடியதாக இருந்தது. இது வரை தனிமை யில் வாடிய தங்களின் குடும்ப உறுப்பினர்களுடன் விடுமுறை நாட்களை கழிக்க வேண்டு மென்ற எண்ணம் இங்கே பின் தள்ளப்பட்டது. எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. ஒரே ஒருமுறை நாங்கள் குடும்பமாக சுற்றுலா சென்றிருக்கின்றோம். அதுவும் வெளிநாட்டிலிருந்து ஒரு உறவினர்கள் வந்தபடியினால் மாத்திரமே சாத்தியமானது.

வெளிநாட்டு கலாசாரத்திற்குள் எனது பெற்றோர்களோ அல்லது அவர்கள் வயதை ஒத்தவர்களோ நுழைய விரும்பவில்லை. அவர்களைப் பொறுத்த வரையில் இந்த அகதி வாழ்க்கை ஒரு தற்காலிகமானதே. இந் நாட்டு மொழி யைக்கற்றுக் கொள்ளாமல் போனதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.இது அவர்களையும் என்னையும் சேர்த்தே வெளிநாட்டு கலாசாரத்திலிருந்து தனிமைப்படுத்தி வைத்தது. ஒரு விதத்தில் அவர்கள் அப்படி நினைத்ததும் நியாயமானதுதான். இந்த வாழ்க்கை நிரந்தமற்றது என்ற அவர்களின் கூற்று சரியாகும் பட்சத்தில் நாம் மீண்டும் நாடு திரும்பும் போது இந்நாட்டு கலாசாரத்துடன் அந்த நாட்டில் வாழ முடியாது போகலாம். எனவே குடியேறிய கலாசாரம் மட்டுமல்ல. அதன் மொழியும் தேவையற்றதாகவே அவர்களிற்கு தோன்றியது.

எனது அம்மாவின் ஆசையை அப்பாவோ அல்லது அப்பாவின் ஆசையை அம்மாவோ கேட்டறிந்ததை நான் பார்த்ததில்லை. ஏனைய குடும்பங்களிலும் இதே நிலைதான் என்பதை எனது நண்பர்களுடன் பழகும் போது தெரிந்து கொண்டேன். மாறாக இருவரும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கே உழைத்தனர். இப்படி ஓய்வற்ற உழைப்பினால் அவர்களின் உடலில் உண்டான பாதிப்புக்களை 25 வருடங்கள் சென்ற பின்னர் நான் இன்று கண்முன்னே பார்க்கின்றேன்.

அவர்களைப் பொறுத்தவரை திங்கள் முதல் வெள்ளி வரை வேலை. வார இறுதியில் கொண்டாட்ட நிகழ்ச்சிகள். அவர்களின் பார்வையில் இது சரியானதாகவே இருந்திருக்கலாம். ஆனால் பிள்ளைகளின் வாழ்க்கையில் இதுபெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது என்பதை அவர்கள் அன்றைய சூழ்நிலையில் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

எனது குடும்பத்தில் சண்டையென்றால் அது இன்று வரை பொருளாதராம் சார்ந்ததாகவே இருக்கின்றது. இப்படியான தருணங்களில் நான் எனக்கான தனிமையைத் தேடியே சென்றிருக்கின்றேன். யாரிடம் தவறு என்று எனக்கு சொல்லத் தெரியாதவயது. அப்படியே சொன்னாலும் "உனக்கென்ன தெரியும்" என்று ஓரங்கட்டப்பட்டுவிடுவேன். அநேகமான சண்டைகளில் ஒருவரை ஒருவர் மாறி குற்றத்தை சுமத்துவார்கள். தங்களிடம் தவறு இருக்குமா என்பதை பற்றியெல்லாம் சிந்திப்பதில்லை. அதற்கு மேல் பிள்ளைகள் உள்ளனர் என்ற சிந்தனை இருப்பதில்லை. நான் என அப்பாவிடமிருந்து இன்று வரை அந்நியப்பட்டு போனதற்கு இதுவே எனக்கு முக்கியமான காரணமாக தெரிகின்றது.

நான் மேற்சொன்ன எதையுமே அவர்கள் தெரிந்து செய்திருக்கமாட்டார்கள். அவர்கள் வளர்ந்த மற்றும் வளர்க்கப்பட சூழலின் தாக்கத்தினால் அவர்களிற்கு சரியாகப்பட்டதை செய்தார்கள். அதன் நன்மையும் தீமையும் இரண்டாம் தலைமுறையினரைமட்டு மல்லாமல் இன்று அவர்களையும் சேர்த்து விரட்டிக் கொண்டேயிருக்கின்றது.

பொருளாதாரத்தில் முன்னேறியவன் மகிழ்ச்சியாக இருக்கின்றான் என்ற மாயை காலனியாதிக்கத்திலிருந்து தொடர்ந்து கையளிக்கப்பட்டு வந்துள்ளது. இதனை நான் இன்று உறுதியாக நம்புகின்றேன். பொருளாதார முன்னேற்றமே வாழ்க்கையின் முன்னேற்றம் என்ற குறிக்கோளை நோக்கியே நகர்ந்தார்கள். இப்பொழுது கலாசாரம் என்ற போர்வையில் நடைபெறும் கொண்டாட்டங்களே இதற்கு உதாரணம்..

இந்த பொருளீட்டலில் சிலர் வெற்றி கண்டிருக்கலாம். ஆனால் அவர்களெல்லோரும் மகிழ்ச்சியாக உள்ளனரா என்றால் இல்லை.

குடும்பமாக ஒரு விடயத்தை கலந்தாலோசிப்பதோ, அல்லதுஏனைய குடும்ப உறுப்பினர்களின் கருத்தை கேட்டறிவதோ, அல்லது பிள்ளைகளை ஒரு முறை கட்டியணைப்பதோ எதுவாக இருந்தாலும் சரி எனக்கு மட்டுமல்ல இது எனது நண்பர்கள் வட்டாரத்திலும் நடைபெறவில்லை. இது போன்ற சின்ன சின்ன விடயங்கள் மகிழ்ச்சியின் அறிகுறியில்லையா? இந்நாட்டு கலாசாரத்தில் இவையனைத்தும் மகிழ்ச்சியான குடும்பத்தின் குறியீடாகவே பார்க்கப்படுகின்றன. தங்களின் விருப்பு வெறுப்புகளை பிள்ளைகளுடன் பகிர்ந்து கொண்ட தமிழ்ப் பெற்றோர்களை நான் அரிதாகவே பார்த்திருக்கின்றேன். பொறாமைப்பட்டுமிருக்கின்றேன்.

**(இன்னும் வளரும்)**

## கவலைக் கண்ணன்



"உலகம் போற போக்கைப் பாரு டிங்கிரி டிங்காலே..."
என்று அந்தக் காலத்திலை ஒரு பாட்டு..
இண்டைக்கு உலகம் எங்கை போகுது..?
எப்படிப் போகுது எண்டு ஒண்டுமே புரியேல்லை.
விலை வாசி கிடு..கிடு எண்டு ஏறிக்கொண்டே
போகுது. தெருவாசிகள் மட்டும் அதிகம்
கவலைப்படுவதாக இல்லை. சித்தன் போக்குச்
சிவன் போக்கு என்ற நிலை அவர்களுக்கு..
எல்லாத்துக்கும் உலகமயமாதல்தான்
காரணமென்று சொல்லுகிறார்கள். உலகம்,
கலகமயமாதலாக இருக்கிறபோது, எல்லாம்
தலைகீழாகத்தான் இருக்கும் பாருங்கோ.
மனிதனுக்கு மட்டுமல்ல உலகத்திற்கும்
தலையைச் சுற்றாமல் என்ன செய்யும்???

ராதேயன்




# ஜெயபேரிகை கொட்டடா!

இன்றைய காலகட்டத்தில் றொனால்டோவும் மெஸியும் சிறந்த வீரர்கள் என்பது அவர்கள் விளையாடும் கழகங்களுக்காகப் பெற்றுக்கொடுத்த வெற்றிக்கிண்ணங்கள் மற்றும் சர்வ தேச உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் ஐரோப்பிய உதைபந்தாட்டச் சம்மேளனம் ஆகியவை வழங்கிய சிறந்த வீரர்களுக்கான விருதுகள் மூலம் தெரியவந்தாலும் சொந்த நாட்டுக்காக ஒருகிண்ணத்தைத்தானும் பெற்றுக்கொடுக்காதது அவர்கள் இருவரது விளையாட்டு வாழ்வையும் பூரணத்துவமாக்கி இருக்கவில்லை. அந்த மனஉளைச்சலே மெஸியை சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற வைத்தது. அத்தகைய ஒரு நெருக்கடியிலேயே தனது இரண்டாவது யூரோ இறுதிப்போட்டியில் றொனால்டோவும் களமிறங்கினார். துரதிர்ஷ்டவசமாக றொனால்டோ காயம் அடைந்தாலும் அது தற்செயலானதா அல்லது திட்டமிட்ட ஒன்றா என்பது சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது.

றொனால்டோவை எப்படியாவது ஆட்டம் முழுவதும் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்று பிரான்ஸ் வியூகம் வகுத்திருக்கும் என்பது தெரிந்தாலும் அதற்கு இத்தகைய ஒரு வழியினை அவர்கள் கையாண்டிருப்பார்கள் என்று தோன்றவில்லை. கடந்த உலகக் கிண்ணப் போட்டியின் காலிறுதி ஆட்டமொன்றில் பிறேசில் வீரர் நெய்மர், கொலம்பிய வீரர் ஜூவான் சூன்காவினால் கீழே தள்ளிவிட்ட போது இருந்த ஒரு வன்மத்தைப் போன்று றொனால்டோவுக்கு பிரான்ஸ் வீரர் டிமிட்றி பெயட்டினால் காயம் ஏற்படுத்தப்பட்ட போது தோன்றவில்லை ஆயினும் அதனை வலு நுட்பமாகக் கையாண்டு விட்டார் என்ற உணர்வே ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

றொனால்டோ வெளியேறியவுடனேயே எங்கே போட்டி ஒரு பக்கச் சார்பானதாக பிரான்ஸிடம் கைமாறி கடந்த உலகக் கிண்ணத்தில் நெய்மர் இல்லாத பிறேசில் அணி ஜேர்மனியிடம் 7 கோல்களை வாங்கியதைப் போன்று நிகழ்ந்துவிடுமோ என்று பயந்தாலும்; அதன்பிறகும் வீரர்களின் சமநிலை குலையாமல் போர்த்துக்கல் ஈட்டிய வெற்றி மகத்துவமானது தான். இன்னொருபுறம் இந்த வெற்றி றொனால்டோவை நம்பியே போர்த்துக்கல் அணி கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்றதொரு மாயையையும் உடைத்தெறிந்துள்ளது.

# தீர்க்கதரிசனத்தின் முடிவு



டெஸ்ட் தொடர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து நடத்துவதற்கான ஐசிசியின் முன்மொழிவுக்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் திலங்க சுமதிபால எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் ஏழு இடங்களில் உள்ள அணிகள் முதற்பிரிவிலும் அடுத்த ஐந்து இடங்களில் உள்ள அணிகள் இரண்டாம் பிரிவிலும் உள்ளடக்கப்பட்டு டெஸ்ட் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதன் மூலம் அதிகளவான அணிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து வாய்ப்பு கிடைப்பதோடு போட்டிகளின் விறுவிறுப்பையும் அணிகளின் போராடும் குணத்தையும் அதிகரிக்க முடியும் என்றதொரு நோக்கிலேயே இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதன்பிரகாரம் முதல் வருடத்தில் குழு ஒன்றில் 7ஆம் இடத்தில் காணப்படும் அணி அடுத்தவருடம் குழு இரண்டுக்குத் தரமிறக்கப்படுவதுடன் குழு இரண்டில் முதலிடத்தில் உள்ள அணி குழு ஒன்றின் ஏழாவது அணியாக தரமுயர்த்தப்படும். தற்போது 7ஆம் இடத்தில் உள்ள இலங்கை அடுத்த முறை பிரிவு உருவாக்கப்படும் பொழுதும் 7ஆம் இடத்தில் நீடித்தால் தரமிறக்கப்படும் நிலை இருப்பதாலேயே தான் எதிர்ப்பதாக சுமதி பால தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் பேறுபேறுகள் தற்போது இறங்குமுகத்தில் உள்ளன என்பது தெரிந்ததுதான் என்றாலும் அது தொடர்ந்தும் அவ்வாறு தான் இருக்கும் என்று சுமதிபால எவ்வாறு முடிவு செய்யலாம்? இதுதான் இலங்கை அணி மீது அவர் வைத்துள்ள நம்பிக்கையா? சுமதிபாலவின் இந்த எதிர்மறைக் கண்ணோட்டமே வீரர்களின் மனவுறுதியைச் சிதைத்து விடும் போல் உள்ளது.

இனிவரும் ஒரு வருட காலத்தில் அவுஸ்ரேலியாவுடனும் தென்னாபிரிக் காவுடனும் இலங்கை சொந்த மண்ணில் 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. ஒவ்வொரு டெஸ்ட் தொடரும் முடிவடைந்த பின்னர் தர வரிசைப் பட்டியல் புதுப்பிக்கப் பட்டு வெளியிடப்படுவதனால் இவற்றில் ஒரு தொடரை வென்றால் கூட தரவரிசைப்பட்டியலில் முன்னேறுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனாலும் இது சாத்தியம் இல்லை என்று தெரிந்துதான் சுமதிபால எதிர்த்துள்ளாரோ?

ஐசிசியின் இந்தத்திட்டத்தில் உள்ள குறைபாடு எல்லா டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற அணிகளுக்கும் டெஸ்ட் அந்தஸ்துக் கொடுக்கப் படவுள்ள அணிகளுக்கும் வருடந்தோறும் நடத்தப்படும் டெஸ்ட் தொடர்கள் சமனாக இருக்குமா என்ற நிலையில் எந்த அடிப்படையில் டெஸ்ட் தரவரிசைப்பட்டியலை ஒரு அளவுகோலாக எடுத்துக் கொள்ள முடியும்? என்பதே. இத்தகைய வலுவான காரணம் உள்ளபோதும் அதனைக் கருத்திற் கொள்ளாமல் சுமதிபால தெரிவித்திருக்கும் கருத்து ஏற்புடையதொன்றாகத் தோன்றவில்லை.



# நிதானமாகச் சிந்திக்கலாமே!

சில தினங்களுக்கு முன்னதாக பிரண்டன் மக்கலம் இனி வருங்காலங்களில் இருபதுக்கிருபது போட்டிகளை கழகங்களும் உலகக் கிண்ண இருபதுக்கிருபது தொடரை மட்டும் ஐசிசியும் நடத்துவதுதான் சிறந்தது என்ற சாரப் படக் கருத்தொன்றை ஐசிசியிடம் தெரிவித்துள்ளார்.

இன்றைய அவசர யுகத்திற்குப் பொருத் தமாதான வடிவமாக இருபதுக்கிருபது போட்டிகள் இனங்காணப்பட்டதால் அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் போன்ற நாடுகளில் ஐ.பி.எல் போட்டிகள் ஆரம்பிக்கப்படும் முன்னரே இருபதுக்கிருபது போட்டிகள் நடைபெற்றிருந்தாலும் ஐ.பி.எல்லின் வருகைக்குப் பிறகு அதை அடியொற்றி பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் இருபதுக்கிருபது தொடர்கள் நடைபெற்று உள்ளூர், வீரர்களும் வெளிநாட்டு வீரர்களும் விளையாடி வருகின்றனர்.

உண்மையில் இன்றைய ரசிகர்களுக்குத் திகட்டும் அளவுக்கு ஐ.பி.எல், பிக்பாஸ், சி.பி.எல் போன்ற இருபதுக்கிருபது போட்டித் தொடர்களும் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் ஐ.சி.சி நடத்தும் சர்வதேச இருபதுக்கிருபது போட்டிகளின் எண்ணிக்கையை விட கழங்கங்கள் நடத்தும் இருபதுக்கிருபது போட்டிகளின் எண்ணிக்கை அதிகம் என்ற யதார்த்தத்தைதான் மக்கலம் கூறிய முதற்கருத்தின் ஊடாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

அதேவேளை சர்வதேச இருபதுக்கிருபது போட்டிகளில் விளையாடாமல் மக்கலம் கூறுவது போல நேரடியாகவே உலகக்கிண்ணப் போட்டிகளை ஐசிசி நடத்தினால் ஒரு அணிக்கு எவ்வளவு தூரத்திற்கு அனுகூலமான விளைவுகளை அது ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறியே.

தேசிய அணியில் உள்ள வீரர்கள் ஒன்றாக இணைந்து விளையாடுவதன் மூலமே அணியினருக்கிடையிலான ஒற்றுமையும் புரிந்துணர்வும் அதிகரித்து வெற்றியினை ஈட்ட முடியும். சர்வதேச இருபதுக்கிருபது போட்டிகளில் விளையாடாது விட்டால் உலகக் கிண்ணத்தொடர்தான் வீரர்களின் பரீட்சார்த்தக்களமாக இருக்கும். இதனால் எதிரணி வீரர்களின் பலங்களையோ பலவீனங்களையோ அறிந்து கொள்ள முடியாது போய்விடும். எனவே சர்வதேச இருபதுக்கிருபது போட்டிகளையும் ஐ.சி.சி நடத்தினாலே உலகக் கிண்ணப் போட்டிகளின் தரமும் விறுவிறுப்பும் அதிகரிக்கும்.




தொகுப்பு:
சி. விமலன்

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 16.07.2016 அன்று
107, இராசவீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.